விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 18 சனிக்கிழமை (02.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073

# போர்க் குற்ற விசாரணைகள் இலங்கையில் நடைபெறவில்லை

## அமெரிக்கா தெரிவிப்பு

(வாஷிங்டன்), இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தவொரு விசாரணைகளையும் ஆரம்பிக்கவில்லை என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

வாஷிங்டனில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் பற்றிக் வென்ரெல் இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## நோ .்.பயர் சூன் நேற்று திரையிடப்பட்டது

சனல் 4 தொலைக்காட்சியின் நோ ஃபயர் சூன் என்ற இலங்கையில் நடந்ததாகக் கூறப் படும் போர் குற்றங்கள் குறித்த படம் நேற்று ஜெனிவாவில் ஐ.நா வளாகத்தில், மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளுக்காக வந்திருந்தவர்களுக்காக திரையிடப்பட்டுள் ளது.

ஐ.நாவின் 23ஆவது (19ஆம் பக்கம் பார்க்க)

## ஹயஸ் விபத்து இருவர் பலி

(முல்லைத்தீவு)

அநுராதபுரம் கல்குளம் மிகிந்தலை பிர தேசத்தில் இருந்து முல்லைத்தீவு சென்ற ஹயஸ் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் சாரதி உட்பட இருவர் பலியாகினர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 5.45 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளை ஐயனார் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்று ள்ளது.

இதில் மாத்தறை (19ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிகள் பிரிட்டனில் பேச்சு

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டயர் போர்டிற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற் றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந் திரன் ஆகியோர் பிரிட்டனுக்கு விஜயம் செய் துள்ளனர்.

வடக்கு- கிழக்குநிலைமைகள், மனிதஉரிமை கள் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு சரியான அரசியல் தீர்வுத் திட்டமொன்று (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தில் ஐ.நாவின் தலையீடு போதாது

### குற்றஞ்சாட்டுகிறார் நவநீதம்பிள்ளை

இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் கடமையாற்றத் தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இறுதிக்கட்ட யுத்தத்தின்போது பொதுமக்களை பாதுகாக்கும் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பங்களிப்பானது திருப்தியளிக்கும் வகையில் அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை அமர்வுகளில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். நவநீதம்பிள்ளை 2012-ம் ஆண்டுக்கான அறிக்கையும் சமர்ப் பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கியநாடுகள் அமைப்பு உரிய முறையில் கடமையாற்றவில்லை என்ற குற்றச்சாட்டு, ஓர் எச்சரிக்கை சமிக்ஞையாகக் கருதப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இறுதிக் கட்ட யுத்தம் தொடர் பில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சமர்ப் பிக்கப்பட்ட மீளாய்வு அறிக்கையில், ஐக்கிய நாடுகள் அமைப்பு கடமை தவறியதாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. (எ-11)

## அமெரிக்காவும் இலங்கையும் நேரடியாக பேச வேண்டும்!

### இந்தியா அறிவுறுத்து

இலங்கைக்கு எதிராக இந்தமுறை அமெ ரிக்கா மனித உரிமைகள் மாநாட்டில் கொண்டு வரவுள்ள பிரேரணை தொடர்பில் அமெரிக்கா வும், இலங்கையும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று இந்தியா அறிவுறுத் தியுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த பிரேரணை குறித்த இரண்டு தரப்பும் பேசிக்கொள்வதன் ஊடாக, முறையான இணைக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அமெரிக்காவினால் மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையின் பிரதி ஒன்று இந்தியாவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இந்திய மத்திய (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும்

### வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு ஆதரவாக இந் தியா வாக்களிக்கும் என வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான நாடுகளி னால் முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்கும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை யின் வெளிவிவகார அமைச்சு இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக வாக்களிக்கப்படும் என இந்தியா இது வரையில் உத்தியோகபூர் வமாக அறிவிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜெனிவா (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சிறுவர் படையணியில் பாலச்சந்திரன் இருந்தார்



### சவேந்திர சில்வா தெரிவிப்பு

பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் புலிகளின் சிறார் படையணியில் இருந்தவர். அவர் கொலை செய்யப்பட்டதாக மனித உரிமை பேரவையில் ஈழவாதிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டிற்கு தாம் உரிய பதிலை வழங்கப் போவதாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தப் பொய்யான குற்றச்சாட்டை இராணுவத்தின் மீது சுமத்த ஏன் நான்கு வருடங்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் சமரசிங்கவின் உரை முழுப் பூசணியை சோற்றில் மறைக்கும் செயல்

### சிவில் அமைப்புகள் குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யின் 22-வது அமர்வில் இலங்கை ஜனாதி பதியின் சிறப்புத் தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ள கருத்துக்கள் உண்மைக்கு மாறானவை என்று சிவில் சமூக அமைப்புகள் கூறுகின்றன.

இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட் டுள்ள தீர்மானம் தேவையில்லாத ஒன்று என் றும், அது கொண்டுவரப்பட்டிருக்கும் நேரம் கூட தவறானது என்றும், அது ஐ.நா மனித உரிமை கவுன்ஸின் அடிப்படைக் கொள்கை



களுக்கு முரணானது என்றும், ஐ.நா மனித உரிமைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலைக்கு பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும், கொண்ட திடீர் மரண் விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமாரே பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலைக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீதி அமைச்சின் செயலாளர், கமலினி டி சில்வாவினால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணநீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து பதவியை பொறுப்பேற்றுள்ளார். இவர் ஓய்வு நிலை பிரதம எழுதுவினையராவார். (எ-11)

# பிரதமராகும் தகுதி மேர்வினுக்காம்!

(கொழும்பு)

அடுத்த பிரதமருக்கு நானே தகுதியானவன் என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர், அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியில் அடுத்த பிரதமராக நியமிக்க கூடிய வகையில் தகுதியான நபர் ஒருவர் இல்லை.

எனது சகோதரி, சகோதரன் மற்றும் மைத்துனன் ஆகியோர் கொல்லப்பட்டு விட்டனர். என்னால் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அரசியலில் பணியாற்ற முடியும். நானே நம்பிக்கைகுரிய மனிதன் என்றும் அவர் சொன்னார். (எ-11)

# ஆனையிறவில் மீண்டும் பதிவு நடவடிக்கை

(கிளிநொச்சி)

ஆனையிறவில் மீண்டும் பதிவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் மற்றும் வரும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்ட பின்னரே செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த பதிவு நடவடிக்கை மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, தென்னிலங்கையில் இருந்து சுற்றுலா வருபவர்களின் வாகனங்கள் பதிவுகள் இன்றி பயணிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியை வைத்தியசாலைக்கு மாற்ற உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் தமிழ் அரசியல் கைதியொருவரை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும், இவரை மருத்துவமனையில் அனுமதிக்குமாறு தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் உட்பட மூவர் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.

எஸ்.அருள்சாமி என்னும் இந்தக் கைதி, தான் விசாரணை எதுவும் இன்றி மூன்று வருடங்களுக்கும் அதிகமாக கொழும்பு மகசின் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தனது மனுவில் கூறியுள்ளார்.

அருள்சாமி பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட போது அவருக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டதாகவும், சிறைச்சாலையில் அவருக்கு போதுமான மருத்துவ வசதி கிடைக்கவில்லை என்றும், அவரை மருத்துவமனையில் அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என்றும் அவரது சட்டத்தரணி வாதாடினார்.

இந்த விவாதத்தை கேட்ட நீதிமன்றம் அவரை மருத்துவமனையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டது. (எ-11)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கிறது அரசு!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான தமது இரண்டாவது பிரேரணையை முன்வைக்கவுள்ள நிலையில், அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

ஏனைய கட்சிகள் போல தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அரசாங்கம் நியமித்துள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்களில் இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டுள்ளன.

இவற்றை பேச்சுவார்த்தைகள் மூலமே ஒரு இறுதி நிலைப்பாட்டுக்கு கொண்டு வர முடியும் என்று தெரிவித்த அவர், இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார். (எ-11)


## தவறிவிட்டது

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த அருமைத்துரை விஜயகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (790785045V), சாரதி அனுமதிப்பத்திரம், வாகனக்காப்புறுதி, வாகன வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும் சத்திரச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0774607920, 0212224103.

(2052)

## வாகனங்கள் விற்பனைக்கு உண்டு

HN தொடரிலக்கமுடைய HIACE மற்றும் GQ தொடரிலக்கமுடைய TOWNACE வகை வான்கள் விற்பனைக்குள்ளன. இது தொடர்பான விபரங்களை அறிய கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல :0773662551

(சு-2554)

## வாடகைக்கு

யாழ்.கொழும்புத்துறையில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டில் அறைகள் நாளாந்த வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு

விவேகானந்தன் 0777140186

(2049)




## நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....

கட்டணங்கள் (1Kg) இற்கு

லண்டன் 1400/=

கனடா 2500/=



Special Rate:

ஜேர்மன் 5Kg இற்கு 5500/=

அவுஸ்திரேலியா 5Kg இற்கு 5500/=

சுவிஸ் 5Kg இற்கு 7800 /=

சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/=, லண்டன் 600/=, சுவிஸ் 600/=

(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்

லண்டன். இத்தாலி. பிரான்ஸ். ஜேர்மனி. கனடா. சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு

500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!

3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210

வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044

(C-2552)

மேலதிக தொடர்புகளுக்கு:

Rain Bow Travels

இல.30/2. 3 ஆம் ஒழுங்கை. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 0212219596 0778710732




## Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.

> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது

> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.

> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நடாத்துகின்றது.

> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

Macro Ads

BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.

021 2219910 / 0777 102131

www.bcas.lk

Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731

Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### ஒப்புக்கொள்ளும் குணம்

விக்கிரம சோழன் என்றொரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் மாறுவேடம் பூண்டு நகர்ச் சோதனைக்காகப் புறப்பட்டார்.

சிறைச்சாலையிலே கைதிகள் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து விட்டு வரலாமென போனார்.

பல கைதிகள் சிறைச்சாலை அறைகளினுள் அடைப்பட்டுக் கிடந்தனர். அதிலே ஒரு கைதியை அழைத்து "நீ ஏன் இந்த இடத்திற்கு வந்தாய்?" என்று ராஜா விசாரித்தார்.

"நான் ஒரு வாடகை வீட்டிலே குடியிருந்தேன். அவ்விடத்தை விட்டு வெளியேறச் சொன்னார்கள். வேறு வீடு கிடைக்கவில்லை. அங்கேயே இருந்தேன். அதற்காக என்னை பொலிஸாரிடம் முறையிட்டு உள்ளே தள்ளி விட்டார்கள்- என்று அந்நபர் கூறினார்.

ராஜா வேறொரு கைதியை அழைத்து "நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று கேட்டார்.

"ஒருநாள் தெருவிலே நடந்து போய்க் கொண்டிருந்தேன். தெருவிலே ஒரு தங்கச் சங்கிலி கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு கடையில் விற்பதற்காகப் போனேன். அவ்விடத்தில் வைத்து என்னைப் பிடித்து விட்டார்கள். "திருடினேன்" என்று கூறி தண்டனையும் கொடுத்தார்கள்" என்று கூறினான் அவன்.

ராஜா அடுத்தபடியாக இன்னொரு கைதியிடம் விசாரணையை ஆரம்பித்தார்.

"ஐயா... நான் வேறு ஒன்றும் செய்யவில்லை. ஒரு சிறிய கோயில் கட்டுவதற்காக மக்களிடம் பணம் வசூல் செய்தேன். பணம் கொடுத்தவர்கள் புகாரையும் சேர்த்துக் கொடுத்து விட்டார்கள். நான் வசூல் செய்த பணம் அனைத்தையும் சொந்த செலவு செய்து விட்டேன் என்பதற்காக இங்கே கொண்டு வந்து விட்டார்கள்" என்றான்.

ராஜா கடைசியாக வேறொரு கைதியிடம் போனார்.

"ஐயா... நான் மிகவும் ஏழை... ஏழு பிள்ளைகள்; வயதான அப்பா... அம்மா... இருக்கிறார்கள். வேலை செய்தும் போதுமான கூலி கிடைக்கவில்லை. சில சமயங்களில் வேலை கிடைப்பதில்லை. பசிக்கொடுமை... அதனாலே செய்யக்கூடாத ஒரு காரியத்தை செய்து விட்டேன். ஒரு செல்வந்தர் வீட்டிலே திருடி விட்டேன். திருடியது பெரிய குற்றம்; அதிலேயும் பிடிபட்டேன். நியாயப்படி மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. நான் இங்கே வருவதற்கு வேறு காரணம் எதுவுமில்லை. நான் செய்த களவே காரணம் என்றான்.

உடனே ராஜா சிறை அதிகாரியை அழைத்தார். வேகமாக வந்தார்.

இதோ பார்! இங்கே வந்திருக்கும் திருடனைத் தவிர வேறு யாரும் ஒரு குற்றமும் செய்யவில்லை. இந்த நபர் மட்டுமே குற்றம் புரிந்துள்ளான். நல்லவர்கள் பலபேர் இருக்கும் இடத்தில் ஒரு பொல்லாதவன் இருக்கக் கூடாது. அதனாலே உடனே இவனை விடுதலை செய்யுங்கள்" என்று உத்தரவு பிறப்பித்தார். தவறை உணர்ந்தவன் வெளியிலே வந்து விட்டான்.

குற்றத்தை ஒப்புக் கொள்வது ஒரு பெரிய குணம். அதற்குத் தைரியமும் மனப்பக்குவமும் வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தெல்லிப்பழை உண்ணாவிரதத்தில் அசம்பாவிதங்கள் நடைபெறவில்லை

## முறைப்பாடு செய்தாலே நடவடிக்கை-பொலிஸ் அத்தியட்சகர்

கைது செய்தலுக்குரிய பாரிய குற்றங்கள் எவையும் தெல்லிப்பழை உண்ணாவிரதப் போராட்டத்தில் இடம் பெறவில்லை.

பொதுமக்கள் யாரையும் பொலிசாரிடம் பிடித்தும் கொடுக்கவில்லை என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

தெல்லிப்பழை உண்ணா விரதப் போராட்டத்தின் போது நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட வினாக்களிற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி, காங்கேசன்துறைபொலிஸ்பிரிவுசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் இ.எம்.எம். ஏக்கநாயக்க ஆகியோர் பதிலளிக்கையில்,

தெல்லிப்பழை உண்ணாவிரதப் போரட்டம் தொடர்பில் உண்ணா விரத ஏற்பாட்டாளர்களால் எமக்கு முன்கூட்டியே தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளினை நாம் முழுமையாக அவர்களுக்கு வழங்கியிருந்தோம்.உண்ணாவிரதத்திற்கு வந்திருந்தவர்களை நாங்களே எமது பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச் சென்று அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைத்தோம்.

எனினும் நீங்கள் கேட்பது போல் அங்கு எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என அவர்கள் இருவரும் பதிலளித்தனர்.

இதற்கு பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் வெளியான செய்திகள் பொய்யானதா? மானிப்பாய் பிரதேச செயலர் தாக்கப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் இருவரின் புகைப்படக்கருவி உடைக்கப்பட்டமை எல்லாம் பொய்யானதா? என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டது. இதற்கு அத்தியட்சகர் இது தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என பதிலளித்தார்.

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலியினை திருடன் அறுத்துச் செல்வ தனை நேரடியாக கண்ணுற்றபொலிசார்அங்கு திருடனை பிடிக்காமல் சங்கிலியினை பறி கொடுத்த பெண் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்த பிற்பாடுதான்திருடன் கைது செய்யப்படுவானா? இதே போல் தான் தெல்லிப்பழையிலும் பொலிசாரின் கண் முன்னே எல்லாம் நடைபெற்றது என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டது.

இதற்கு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்தேவையற்றகேள்விகளுக்கு தம்மால் பதிலளிக்க முடியாது என கூறி விட்டார். இறுதியாக தெல்லிப்பழையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பொலிசாருக்கு மூடி மறைக்க வேண்டிய அவசியமில்லை என்றார்.

இதேவேளை அத்தியட்சகர் குறித்த சம்பவத்தில் ஊடகவியலாளர் ஒருவரின் புகைப்படக்கருவி உடைக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்படவில்லை என கூறியிருந்தார்.

இருப்பினும் சம்பவதினமே யாழ். பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டது என ஊடகவியலாளர் ஒருவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

தெல்லிப்பழையில்நடைபெற்றசம்பவம் தொடர்பில் முறைப்பாடு எடுக்கப்பட வேண்டுமாயின் தனக்கு எழுத்து மூலம் முறைப்பாடொன்றை தருமாறு காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் கூறினார். (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 130 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 50 | 50-80 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 240 | 250 |
| தக்காளி | 120 | 160 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 80 | 70 |
| கரட் | 150 | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 40 | 60 | 70-80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 180 | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 120 | 110 | 140 | 130 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 100 |
| கறிமிளகாய் | 110 | 140 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 500 | 500 | -- | -- |
| போஞ்சி | 140 | 140 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 30 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45-50 | 45-50 |
| இராசவள்ளி | 110 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 150 | 160 |

## இராசி பலன்

*02.03.2013*
*(மாசி 18, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு*
*பஞ்சமி முன்னிரவு 9.11 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 12.17 மணிவரை*
*இராகுகாலம் 9.27-10.57 மணிவரை*
*சுபநேரம் 3.27-4.57 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், கௌரவமான நாள்.

**இடபம்** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரும், உற்சாகமான நாள்.

**மிதுனம்** நண்பர்கள் நாடி வரும் நாள், மாமன் மைத்துனர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சுபகாரியப் பேச்சுகள் முடிவாகலாம்.

**சிங்கம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உடன் பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவு பகை பாராமல் உதவும் நாள்.

**கன்னி** சுய முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள்,குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்,தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** திட்டமிட்ட காரியமொன்று நடைபெறாவிட்டாலும் திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும், பயணத்தால் பலன் கிடைக்கும், கொள்கைப்பிடிப்பை உறவினர் நலன்கருதி கொஞ்சம் தளர்த்த வேண்டிவரலாம்.

**விருச்சிகம்** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தாராளமாக செலவு செய்து மகிழ்வீர்கள், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள்.

**தனுசு** வாய்ப்புக்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், காரிய அனுகூலமுண்டு, தூரதேச பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், நண்பர்கள் சந்திப்பில் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத விதத்தில் பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்,தொலைபேசித் தகவல்கள் மனக்குழப்பத்தை அகற்றும், சொத்துக்களால் ஆதாயமுண்டு,உஷ்ண நிலையான நாள்.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், எதிர்பாரத செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எள்ளங்குளம் இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கை எடுங்கள்

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கோரிக்கை

(கரவெட்டி)

கொற்றாவத்தை எள்ளங்குளம் இராணுவ முகாமை அகற்றித் தருமாறு அக்கிராம பிரதிநிதிகள் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக செயற்குழு கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொற்றாவத்தை எள்ளங்குள பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சியில் இருந்த காலத்தில் அதிகளவான நிலப்பரப்பை மாவீரர்களின் துயில் இல்லங்களை நிர்மாணிக்க மக்களிடம் இருந்து காணிகளை எடுத்தனர்.


பின் அப்பகுதி எள்ளங்குள மாவீரர் துயிலும் இல்லமாகவே பல வருடங்களாக விளங்கியது.

இதனால் அங்கிருந்த மக்களின் பொது மயானம் அருகில் இருந்த தனியார் காணிக்கு மாற்றப்பட்டது.

இதனால் யுத்தகாலம் முடிவுற்ற பின் மாவீரர் துயில் இல்லத்தை முற்றாக அழித்து தற்பொழுது பாரிய இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் பல வருடங்களாக காணிகளை இழந்த மக்களும் பொது மயானம் சீரின்மையால் தொடர்ந்தும் துயரங்களை எதிர்நோக்கும் மக்களும் உள்ளனர்.

இராணுவ முகாமை தமது காணியில் இருந்து அகற்றி தர வேண்டும் எனவும் இந் நிலப்பரப்புக்குள் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு சிறியளவு காணியும் உள்ளது எனவும் செயற்குழு கூட்டத்தில் தவிசாளர் பொ.வியாகேசினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம் செயற்குழு தலைவர் சில்வேஸ்திரி அலென்ரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. (அ-3-24)







# கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில், MS Office, Networking Technology, Desktop Publication ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களை கரவெட்டி விதாதா வள நிலையத்தில் பதிவு செய்யுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ கேட்டுள்ளார். (அ)

# கைவிடப்பட்ட நிலையில் கரவெட்டி இராஜ கிராமம்

## பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

கரவெட்டி இராஜ கிராமம் அனைத்து அரச அதிகாரிகளினாலும் கைவிடப்பட்ட கிராமமாக உள்ளது.

இது தொடர்பாக கரவெட்டி பிரதேச செயலக செயற்குழு கூட்டத்தில் படக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டது.

கரவெட்டி இராஜ கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கூலித் தொழிலையே செய்து வருகின்றனர்.

இதனால் அக்கிராமத்தில் கல்வி அறிவு, பொது நிகழ்வு மற்றும் ஏனைய செயற்பாடுகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இதனால் அக்கிராமத்தில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் வரவு குறைந்து காணப்படுகின்றது.

அத்துடன் அங்கு வீதி அபிவிருத்தி, சந்தை புனரமைப்பு, வாய்க்கால் புனரமைப்பு என்பன இடம்பெறவில்லை.

அத்தோடு குடிநீர் தட்டுப்பாடு, வீட்டுத் திட்டங்களில் உள்வாங்கப்படாமை, சுகாதாரப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் அக்கிராமத்தை தொடர்ந்தும் தாக்குவதால் விருத்தி அடைய முடியாதுள்ளது.

இக்கிராமம் பின்தங்குவதற்கு துறை சார்ந்த அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் எனவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

எனவே, இக்கிராமம் ஏனைய கிராமங்கள் போன்று அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து தரமுயர்த்தப்பட வேண்டும் என அம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# கொடியேற்றம்

(தும்பளை)

பருத்தித்துறை கொட்டடி பெரிய பிள்ளையார் ஆலய கொடியேற்றம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி இரதோற்சவமும் எதிர்வரும் 11 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி தெற்ப உற்சவமும் நடைபெறவுள்ளது. (அ-3-19)

## கல்கி பகவானின்

# இணைய நேரடி ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீகல்கி பகவானின் 65 ஆவது ஜென்ம தினத்தை முன்னிட்டு ஸ்ரீகல்கி பகவானின் இணைய நேடி ஒலிபரப்பின் மூலம் உரையாற்றவுள்ளதோடு இந்நிகழ்வை சற்சங்கங்கள் மூலம் ஒழுங்கு செய்யப்படும் நிலையங்களில் பார்வையிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிபண்டபத்தில் நேரடி இணைய ஒலிபரப்பின் மூலம் பார்வையிட முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# 20 பேருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்தது நீதிமன்றம்

(கரவெட்டி)

பருத்தித்துறை மதுவரி திணைக்களத்தினால் வடமராட்சி கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த இருபது பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மதுவரி திணைக்களத்தின் சட்டத்தை மீறினார்கள் என குற்றஞ்சாட்டப்பட்ட 20 பேர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி 20 பேரும் தமது வீடுகளில் அதிகளவான கள்ளை பதுக்கி வைத்திருந்ததாகவும் சிலர் விற்பனை செய்ததாகவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

நீதிமன்றில் ஆஜராகிய 20 பேரும் தமது நியாயங்களை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரத்தின் முன்னிலையில் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

வழக்கை விசாரித்த நீதவான் அன்றாட சீவியத்துக்காக தொழில் செய்யும் தொழிலாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளிடம் போதிய ஆதாரங்கள் இன்மையாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார். (அ-3-24)

## வெளிமாவட்ட வியாபாரிகள்

# வடம.தெற்கு, மேற்கு பகுதிகளில் வியாபாரம் செய்ய முடியாது

(கரவெட்டி)

வடமராட்சியில் தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வெளிமாவட்ட வியாபாரிகள் வியாபாரம் செய்வதை தடை செய்வதென செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.


வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட நெல்லியடி நகர்ப்பகுதி மற்றும் ஏனைய பகுதிகளில் வெளியூர் வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.


இதனால் அப்பகுதி வர்த்தகர்கள் பல இலட்சம் ரூபா கொடுத்து வர்த்தக நிலையங்களை பெற்று வர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

அத்துடன் அதிகமான உள்ளூர் தொழிலாளிகளுக்கு அப்பகுதி வர்த்தகர்களே வேலை வாய்ப்பை அளிப்பதாகவும் இதனால் அதிகமான தொழிலாளிகளும் பாதிப்படைகின்றனர்.

எனவே, எதிர்காலத்தில் இவ் வெளியூர் வியாபாரிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது என செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ-3-24-10)







ரோயல் நோர்வே தூதரகம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடனும் சேவா நிறுவனத்தின் அனுசரணையுடனும் பாரம்பரிய சாஸ்திரிய [illegible] இசை நிகழ்வுகளை பிரதிபலிக்கும் முகமாக கலைஞர்களால் வழங்கப்பட்ட யாழ்.இசைவிழா நேற்றைய தினம் யாழ். நகராட்சி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது... (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளும் தரப்புக்கு ஆதரவாக வாதிடும் எதிர்க்கட்சி உறுப்பினர் றெமீடியஸ்

## தேவாபுர பெயர் மாற்ற விடயத்தால் சபையில் கலகலப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் மு.றெமீடியஸ் அரசியலுக்கு பொருத்தமற்றவர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் குற்றஞ்சாட்டியதை அடுத்து இருவருக்கும் இடையில் சபையில் கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் போதே இருவருக்கும் இடையில் இந்த வாக்குவாதம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் போது யாழ். வசந்தபுரம் கிராமத்தின் பெயர் மாற்றப்பட்டு தேவாபுரம் என பெயர் சூட்டப்பட்டதற்கான விவாதம் இடம் பெற்றது.

இதன் போது ஆளும் தரப்பிற்கு சார்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் மு.றெமீடியஸ் வாதிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்து கொண்டு ஆளுந்தரப்பிற்கு ஆதரவளிப்பதாக குற்றஞ்சாட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கையில் இருப்பதற்கும் எதிர்ப்பு தெரிவித்தார்.

ஆளும் தரப்புடன் இணைந்து செயற்படுவதுடன் வசந்தபுரம் கிராமத்திற்கு தேவாபுரம் என பெயர் மாற்றப்பட்டது.மாகாண சபைக்கு அறிவிக்கப்படாமல் பெயர் சூட்டப்பட்டது சட்டத்திற்கு முரணானது எனவும் குற்றம் சாட்டினார்.

வசந்தபுரம் கிராமத்திற்கு தேவாபுரம் என பெயர் சூட்டும் முயற்சி நீண்ட காலமாக யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சியினரால் எடுக்கப்பட்டுவந்ததோடு ஆரம்பத்திலிருந்து எதிர்க்கட்சியினர்இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது வசந்தபுரத்திற்கு தேவாபுரம் என பெயர் சூட்டுவது தொடர்பில் கடும் வாக்குவாதம் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே இடம்பெற்றது.

ஆளும் கட்சியினர் கொண்டு வரும் பிரேரணைகளை முதலில் ஆதரிப்பவராக எதிர்க்கட்சி உறுப்பினர் மு.றெமீடியஸ் இருந்து வருகின்றார்.

இது தொடர்பாக ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற போதும் அக்கட்சியின் உயர் பீடத்தினர் அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு 50 இலட்சம் ஒதுக்கீடு

(பூந்தோட்டம்)

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கான விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பதற்காக 50 இலட்சம் ரூபா வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீனால் ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபையின் உறுப்பினர் அப்துல் பாரி தெரிவித்துள்ளார்.

கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவுகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விஞ்ஞான பிரிவு மாணவர்கள் தமது செயன்முறை கற்கையை மேற்கொள்வதற்கு ஆய்வுகூடம் தேவை என வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் முகைதீன் மற்றும் நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி ஆகியோர் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-2-266)

# வலயமட்ட மரதன் ஓட்டம்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு வலயக்கல்வி பணிமனையின் முன்னாள் ஆரம்பமாகவுள்ளதாகவவுனியா தெற்கு உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஏ. எம் சுபைர் தெரிவித்துள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆரம்பித்து வைக்கும் மரதன் ஓட்டப்போட்டி ஏ 9 வீதி வழியாக நொச்சிமோட்டை சென்றடைந்து மீண்டும் அங்கிருந்து வலயக்கல்விப்பணிமனையை வந்தடையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்கள், பெண்கள் என இரு பாலாருக்குமான இப் போட்டியில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 10 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2-266)

# திருட்டு மின்சாரம் பெற்ற 6 பேருக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி நகரப்பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஆறு பேருக்கு 15 இலட்சம் ரூபா அபராதம் செலுத்த பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

வடமராட்சி நெல்லியடி நகரப்பகுதியில் கடந்த 23ஆம் திகதி சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் என கொழும்பில் இருந்து வந்த விசேட சட்ட விரோத மின்சார தடுப்பு பிரிவினரால் வழக்குகள் பதியப்பட்டு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையில் மின்சார சபைக்கு நட்ட ஈடாக 6 பேருக்கும் 9இலட்சத்து 78ஆயிரம் ரூபாவையும் நீதிமன்றத்திற்கு அபராதமாக தலா ஒருஇலட்சம் ரூபாவும் செலுத்த உத்தரவிடப்பட்டது. (அ-3-24)

# வருடத்தில் மூன்று போகமும் விளையக்கூடிய புதிய நெல்லினம்

## முள்ளிவாய்க்கால் அதிசயம் என பெயர் சூட்டப்பட்டது

(பூந்தோட்டம்)

கிளிநொச்சியில் இம்முறை பயிரிடப்பட்ட பாஸ்மதி அரிசி வகையை சேர்ந்த நெல் வகையின் அறுவடை கடந்த 27 ஆம் திகதி இடம் பெற்றதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் தலைவர் செல்லையா சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் கடந்த 1997 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொண்ட 16 வருட ஆராய்ச்சியின் பயனாக தனித்தன்மையான மரபுரிமை வகை உடைய நல்வித்து தெரிவு மூலம் தெரிந்து எடுக்கப்பட்டு 20 நெற்பெயர் தலைமுறைகள் ஆய்வின் பயனாக பாஸ்மதி ரகத்தில் தெரிவு செய்யப்பட்ட உயர் அரிசி நெல்வர்க்கம் ஒன்றே இது.

விவசாயத்துறை சார்ந்த மக்களுக்கு உயர் வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்துவதற்கான தூர நோக்கு சிந்தனையின் ஒரு வெளிப்பாடு இது எனவும் அவர் தெரிவித்தார்.

வருடத்தில் மூன்று போகமும் விளையக்கூடிய இந்நெல் வர்க்கம் விவசாயிகளினது வாழ்க்கைத் தரத்தை உயர்துத்துவதுடன் நிச்சயமாக நாட்டிற்கு அந்நிய செலாவணி வருமானத்தையும் ஈட்டித்தரக்கூடியதாகும்.

சாதாரண சூழ்நிலைகளிலும் அசாதாரண சூழ்நிலைகளிலும் மற்ற நெல்லினங்களை விட அதிக தாங்கும் திறனும் விளைச்சலையும் வெளிப்படுத்தியுள்ள இந்நெல் இனமானது வட பகுதியில் வெள்ளத்தினால் வயல் நிலங்கள் அழிவை சந்தித்துள்ள நிலையிலும் மிகவும் வாட்டசாட்டமாக நெற்பயிர்கள் வெள்ள பாதிப்பினையும் மிக நன்றாக தாங்கி அதிக நெல்லாக இது அறுவடை செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சகாதேவன் கூறுகையில், கடந்த 2009 இறுதி யுத்த காலப்பகுதியில் முள்ளிவாய்க்கால் யுத்த வலயத்திலிருந்து செட்டிகுளம் நலன்புரி நிலையத்திற்கு வந்த எனது தந்தையால் ஒரேயொரு நெற்கதிர் மட்டும் பக்குவமாக எடுத்து வரப்பட்டு இந்த அரிதான நெல்லினம் காப்பாற்றப்பட்டு அதில் இருந்து இந் நெல்லினத்தை நாம் தற்போது உருவாக்கியுள்ளோம் என்ற காரணத்தினால் இதற்கு முள்ளிவாய்க்கால் அதிசயம் என்று பெயர் சூட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந் நெல்லினை உத்தியோக பூர்வமாக வெளியீடு செய்வதற்கும் விவசாயிகள் மத்தியில் பரப்புவதற்கும் அரசாங்கத்திடம் எமது ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும் எண்ணியுள்ளோம்.

அத்துடன் இந்த நெல் ரகத்தை அதன் உரிமத்தை போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் ஆராய்ச்சிப்பிரிவு முறைப்படி பெற்று இதன் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாயினை போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க செய்வதற்கும் எண்ணியுள்ளோம் எனவும் தெரிவித்தார். (அ-2-266)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 RC<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Diploma in SLIIT, முகாமையாளர்.<br>தொ.இ: B -1324 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:41, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1330 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'8"<br>கி.பா:41.25, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: Higher Diploma in Engineering, working as forman<br>தொ.இ: B -1326 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்:5'2"<br>கி.பா: 16<br>தகைமை/ தொழில்: Nurse (Norway) விவாகரத்தானவா<br>எ.பா.: விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G-1332 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>உயரம்: 5'8"<br>கி.பா: 60, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B -1327 | பிறப்பு: 1991 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 3, இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/ தொழில்: பல்கலைக் கழக மாணவி<br>தொ.இ: G -1334 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 5'9"<br>கி.பா: 65<br>தகைமை/தொழில்: O/L வியாபாரம்<br>தொ.இ: B -1328 | பிறப்பு: 1980 இந்து அகம்படியார்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>தகைமை/ தொழில்: A/L, AAT<br>தொ.இ: G -1339 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய மகளிருக்கான தொலைபேசியூடான கற்றல்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

விவசாயிகளுக்கான வாழ்நாள் கல்வி (Life Long Learning for farmers- L3 Farmers) திட்டமானது விவசாயத்திலீடுபடும் அனைவருக்குமான வரப்பிரசாதம் என்றே கூறலாம். விவசாயிகளை அறிவியில் ரீதியாக முன்னேற்றுவதன் மூலமாக புதிய தொழில்நுட்பங்களை, உத்திகளை விவசாய செய்கையிலேற்படும் பிரச்சினைகளை அவர்களாகவே இனங்கண்டு அதற்கான தீர்வையும் அவர்கள் எடுப்பதற்கான முன்முயற்சியாகவே இதனைக் குறிப்பிடலாம். உலகளாவிய ரீதியில் இவ்வாறான கல்விமுறை விவசாயப் பெருமக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றியும் கண்டிருக்கிறது. இதனை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதை முன்னேற்பாடாகக்கொண்டு இத்திட்டம் இன்னொரு படிநிலைமைக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகளின் கல்வியூடான அபிவிருத்திக்கான நிறுவனத்தின் திட்டமாக இது இப்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-I



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இம்முறை இத்திட்டத்தினுள் கிராமிய மகளிரினை வலுவூட்டும் திட்டமாக நிதிபற்றிய கல்வியை கைபேசி மூலமாகக் கொடுக்கும் திட்டமாக உருப்பெற்றிருக்கின்றது. நிதி பற்றிய கல்வியை கைபேசியினூடாக வழங்குவதற்காக மொபிடெல் நிறுவனம் இணைந்திருக்கின்றது. இலங்கையில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மூலமாக செயற்படுத்துவதில் அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை கிராமிய மகளிருக்காக சிங்கள மொழிமூலம் யாழ்ப்பாணத்து கிராமிய மகளிருக்காக தமிழ்மொழிமூலமும் இப்பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடமும் 2 நிமிடத்தினுள் அடக்கப்பட்டிருக்கும். நிதி பற்றிய பல்வேறு விடயங்கள் இப்பாட அலகுகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள மாதர் சங்கங்களை இணைத்து அருஞ்சேவையாற்றிவரும் மாதர் அபிவிருத்தி நிலையத்தின் பங்கு அளப்பரியது. இத்திட்டத்தில் முதலில் 300 மகளிரை இணைத்து இது நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது. ஒவ்வொருவரும் தினமும் ஒரு பாடமாகத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு தனியான பாடங்களைக் கிரகிக்கலாம். விருப்பப்படின் பாட எண்ணை மீண்டும் தெரிவு செய்து திரும்பக்கேட்கவும் வசதிகளுண்டு. தாங்களாகவே தங்களிடமுள்ள மொபைல் பேசியில் எண்களை அழுத்தி சுயமாக கற்பதற்கான வாய்ப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஐந்து பாடங்களும் முடிவுறும் போது பல்தேர்வு வினாவும் கேட்கப்பட்டு அதற்காக ஐந்து விடைகளும் தரப்படும். சரியான விடைக்குரிய இலக்கத்தை அழுத்தி உங்களது விடைத்தெரிவை சரிபார்த்துக் கொள்ளலாம்.

மொபிடெல் வலையமைப்பினூடாக இக்கல்விமுறை அறிமுகப்படுத்தப்படுவதனால் மொபிடெல் தொடர்புள்ளவர்கள் மட்டுமே இக்கல்வித் திட்டத்தினுள் இணைந்துகொள்ளலாம். மேலும் இத்திட்டம் தொடர்ந்து ஆறுமாதங்களுக்கு 120 பாடங்களாக பிரிக்கப்பட்டு தரப்படுகின்றது. இத்தொழில்நுட்பத்தின் வசதியினூடாக இவ்வாறான கல்வியை வழங்குவது இதுவே ஆரம்பமாகும். இத்திட்டத்திலுள்ள குறை நிறைகளை அறிந்து இதனை மேலும் விரிவுபடுத்தி மகளிரின் உரிமைகள், சுகாதாரம் இவ்வாறான பல விடயங்களைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

வெறுமனே தொலைபேசியினை கதைப்பதற்காக மட்டும் பயன்படுத்துவதிலிருந்து விடுபட்டு பலவழிகளில் இதனைப் பயனுள்ளதாக மாற்றிவிட வேண்டுமென்ற பலரினதும் ஆவலை இது பூர்த்தி செய்வதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

உலக நாடுகளில் மொபைலினூடான கற்றல் (Mobile Learning) என்பது பல வழிகளில் விரிவுபெற்ற சிறந்த திட்டமாக கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இதனை நாமும் சிறந்த மற்றும் வினைத்திறனான முறையில் பயன்படுத்தினால் எமது விவசாயிகளுக்கும் மக்களுக்கும் சிறந்தசேவையை வழங்கமுடியும்.

இவ்வாறான திட்டத்தின் தேவையை கடந்த வருடம் நடைபெற்ற உலக உணவு ஸ்தாபனத்தின் இலத்திரனியல் மாநாடு வெளிக்கொணர்ந்திருக்கின்றது. அதன்மூலமாக பல்வேறு நாடுகளில் சிறப்பாக நடைபெற்ற மொபைலினூடான கல்வியை நாமும் கிரகிக்க முடிகின்றது.

இவ்வாறான திட்டத்தினுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது விவசாய பீடமும் இணைந்திருக்கின்றது என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். எம்மவர்களுக்கான கல்வியை இருக்கின்ற தொழில்நுட்பத்தின் வசதியுடன் வழங்க எமக்கிந்த வாய்ப்புக் கிடைத்ததை பெருமகிழ்வோடு ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் பல விடயங்களுக்கு இதனை விரிவாக்கவும் நாம் முயற்சிக்கிறோம்.

காலம் நேரம் கூடிவர எல்லாம் சரிவரும் என முதியவர்கள் கூறிய வாக்கு பலித்திருக்கின்றது.

பெப்ரவரி 11ஆம் திகதி இக்கற்றல் திட்டம் சிரேஷ்ட விஞ்ஞான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இம்மாதம் 4 ஆம் திகதியிலிருந்து மொபிடெல் மூலமாக செவிமடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக இணைந்துள்ள அனைத்து மகளிரையும் தவறாது இப்பாடங்களை கிரகித்து பயன்பெறுமாறு உங்களை அழைக்கின்றோம்.

# தேவைகள் குறித்து கோரிக்கை விடுத்தால் உதவி செய்யத் தயார்

## இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


உதவி வழங்குமாறு கோரிக்கை விடுத்தால் அந்த கோரிக்கை உரிய முறையில் பரீசிலிக்கப்பட்டு உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்திற்கு பின்னர் வடக்கு மாகாணத்தில் உதவி கோருவோரின் எண்ணிக்கையும் அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளும் கணக்கிட முடியாத அளவிலுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய அரசாங்கம் பல உதவிகளை வழங்கி வருகின்றது. இன்னும் பல உதவிகளை வழங்கத்திட்டமிட்டுள்ளளோம்.

உதவி தேவைப்படுபவர்கள் விண்ணப்பிக்குமிடத்து அந்த உதவிக் கோரிக்கைகள் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்க தயாரகவுள்ளோம். அமைப்புக்கள், சம்மேளனங்கள், அரச அதிகாரிகள் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்க முடியும்.

பாடசாலைகளும் தமக்கு தேவைப்படும் உதவிகளை விண்ணப்பித்தால் உரிய உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



நல்லூர் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதன்போது நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற அரியாலை ஐக்கிய கழக அணியை படத்தில் காணலாம்.

# முடிக்கப்படாத வேலைகளை விரைவில் செய்து முடிக்க வேண்டும்

## வலி.தெ/மே.கூட்டத்தில் வலியுறுத்தல்

வலி.தென் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பூரணமாக முடிக்கப்படாத அபிவிருத்தி வேலைகள் விரைவாக முடிக்கப்படல் வேண்டும் எனும் கோரிக்கை பிரதேச சபைக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற போதே மேற்குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலும் பல விடயங்கள் ஆராயப்பட்டன. மாரீசன் கூடல் வீதி அபிவிருத்திகள் சம்பந்தமாக பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன.மதிப்பீட்டின் பிரகாரம் வேலைகள் இடம்பெறல் வேண்டும் எனவும் அவை உரிய முறையில் உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சிறந்த முறையில் கண்காணிப்பை மேற்கொள்ளவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது. மதிப்பீடு இடம்பெற்றால் அது அனைத்து உறுப்பினர்களிற்கும் வழங்கப்படல் வேண்டுமென உறுப்பினரால் விடுவிக்கப்பட்ட கோரிக்கை தவிசாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் மதிப்பீடுகள் வழங்கப்பட்டன.

இதுவரை பூரணமாக பல வேலைகள் முடிக்கப்படவில்லை என உள்ளூராட்சி திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் சபைக்கு அறிக்கை சமர்ப்பித்ததன் பிரகாரம் அதுவும் சபையில் ஆராயப்பட்டது. (அ-3-23)

# மின்சாரம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் தொடர்ந்து இரு நாட்களும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். இதன்படி இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை யும் மருதனார் மடம், இணுவில், கோண்டாவில், கொக்குவில், பூநாறிமரத்தடி, நாச்சிமார் கோவிலடி, தட்டார்தெரு, கோம்பையன் மணல் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரையும் மருதனார்மடம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப்பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ் மாநகர சபைப் பகுதி ஸ்ரான்லி வீதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, மருத்துவப்பீடப் பிரதேசம், முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம், அளவெட்டி, மல்லாகம்ஒருபகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், சிறுப்பனை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் விவாதப் போட்டி முடிவும் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் எம்.பிக்களும்

வடமாகாணத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களும் யாழ்.மாவட்டச் செயலகம்,தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, லீட்ஸ் நிறுவனம் ஆகியன இணைந்து நடத்திய பாராளுமன்ற முறையிலான விவாதப் போட்டிகளின் முடிவுகளையும் நடைபெறவுள்ள மாதிரி பாராளுமன்ற நிகழ்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிள்ளைகளின் முடிவுகளையும் லீட்ஸ் நிறுவன அதிகாரி அறிவித்துள்ளார்.

ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 34 பாடசாலைகள் பங்குபற்றிய இந்தப் போட்டிகளில் இறுதிப் போட்டி கிளி/சென் திரேசா பெண்கள் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்கு இடையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பாலியல் துஷ்பிரயோகத்தின் சம்பவங்களும் வீரியமும் அதிகரித்து வருவதனை அடுத்து சட்டத்தினை வலுப்பெறச் செய்யும் நோக்கில் பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களுக்கு மரண தண்டனையை அமுல்படுத்துதல் வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து கிளி/சென்திரேசா பெண்கள் பாடசாலை ஆளுந்தரப்பாகவும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர்த்தரப்பாகவும் விவாதித்தன.

இதில் ஆளும் தரப்பு கிளி/புனித திரேசா பெண்கள் பாடசாலை தங்களின் பிரேரணையில் வெற்றி பெற்றது. இதில்மோ.டிலோயினி,ந.நதுர்சா, கு.விதுர்சா ஆகியோர் விவாதித்திருந்தனர். எதிர்த்தரப்பாக வாதாடிய வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டது. இதில் ப.கதிர்தர்சினி, ம.லூட்ஸ் பூரணி, அ.நிக்கலின் ஸ்ரனிலா ஆகியோர் வாதிட்டனர்.

இதேவேளை மன்னார்சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மற்றும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி ஆகியன அரையிறுதிப் போட்டிகள் வரை தகுதி பெற்றிருந்தன.

பங்குபற்றிய பாடசாலைகளின் பிள்ளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களை கொண்டு அமைக்கப்படவுள்ளமாதிரிசிறுவர்பாராளுமன்ற நிகழ்வுகள் இம் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுகளுக்கு BMZ மற்றும் CBM ஆகிய நிறுவனங்கள் நிதி அனுசரணை வழங்குகின்றன.

**இவ்வாண்டுக்கான சிறுவர் பாராளுமன்ற அவைக்கு தெரிவு செய்யப்பட்ட சிறுவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருமாறு,**

சூ.கோபிநாத் (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி),ச.டிசாந்தன் (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), ப.கதிர்தர்சினி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), தி.செந்தூரன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி), அ.சாம்பவி (யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை),டெ.நடேசன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஆ.ஆனந்த பைரவி (யா/மானிப்பாய் இந்துக் மகளிர் கல்லூரி), க.பிரசன்னா (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), ஶ்ரீ.லக்சனா (யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), கி.நிசாந்தி (யா/ இந்து மகளிர் கல்லூரி), ஜெ.புலேந்திரன் தனுசன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி),கொ.கொன்சிற்றா (யா/இராமநாதன் மகளிர் கல்லூரி), த.அனோஜன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சி.அனோஜிதா (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), அ.டன்ஸ்டன் (யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர் காவற்றுறை),ரா.தமிழரசி (மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எம்.ஏ. பாத்திமா ஹஸ்னா (மன்/சித்தி விநாயகர்இந்துக் கல்லூரி),வி.திபிசா (மன்/ புனித சேவியர் பெண்கள் கல்லூரி), கு.விதுர்ஜா (கிளி/புனித திரேசா பெண்கள்கல்லூரி), மோ.டிலோஜினி (கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி), ம.கேசனா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அ.கேதா (கிளி/முருகானந்தாக் கல்லூரி), நஜீம் முகமட் நஜாத் (மு/வித்தியானந்தாக் கல்லூரி), சி.பவதாரணி (வவு/ இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி யாலயம்), ப.தயானி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி). (அ)

# யாழ். மத்திய கல்லூரியில் இந்தியக் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இந்தியக் கல்விக் கண்காட்சி எதிர்வரும் மார்ச் மாதம் 5,6ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியின் றொனமன் குக் மண்டபத்தில் மிகப் பிரமாண்டமாக இடம்பெறவுள்ளது எனயாழ். இந்தியத்துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்தியத்துணைத் தூதகரத்துடன் இந்தியாவிலிருந்துவருகை தருகின்ற கல்வி ஆலோசகர்கள் இணைந்து நடத்தவிருக்கின்ற இந்தக் கல்விக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் ஶ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, ஆந்திரப்பிரதேசம்

கோணேறு லக்ஸ்மன் பொறியியல் கல்லூரி (கே.எல்.பல்கலைக் கழகம்), குந்தூர் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.

சிங்கட் தொழில்நுட்ப கற்கைகள் சமூகம், புனே, மஹாராஷ்டிரா.

ஶ்ரீ கிருஷ்ணா நிறுவனங்களின் கு-மும், திருப்பதி,ஆந்திரப்பிர தேசம்.

நவோதயா கல்வி நிதியம், ராய்சூர், கர்நாடகா.

இந்தியா லிமிட் கல்வி ஆலோசகர்கள், இந்திய அரச நிறுவனம், புதுடில்லி, நோய்டா போன்ற இந்திய நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தக் கல்வி கண்காட்சி கடந்த மாதம் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தமது உயர் கல்வியை திட்டமிடுவதற்கும் பொருத்தமான கல்வி வழிகாட்டல் அவசியமான குறிப்பாக வடமாகாண மாணவர்கள் இந்தக் கல்விக் கண்காட்சியில் கலந்து அதிக பயன்பெறு முகமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பின்வரும் வேறுபட்ட பாடநெறிகளில் குறிப்பாக பொறியியல், பல்மருத்துவம், தாதியியல், முகாமைத்துவம்,விவசாயம், விஞ்ஞானம், கலைப்பாடங்கள் போன்றவற்றில் ஆர்வமுடைய மாணவர் களுக்கு இந்தக் கல்விக் கண்காட்சி ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

இந்தக் கல்விக் கண்காட்சியில் தேவையான தகைமை உடைய மாணவர்கள் இந்தியாவில் கல்வி கற்க ஆர்வமுடையவர்கள் தமது கல்விச் சான்றிதழ்களை இந்தக் கல்விக் கண்காட்சியில் கலந்து கொள்ளும் போது காண்பித்து தமது கல்வி அனுமதியை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த கல்விக் கண்காட்சி மார்ச் 5 ஆம் திகதி முற்பகல் 10.30 தொடக்கம் பிற்பகல் 6.30 வரையிலும் மார்ச் 6 ஆம் திகதி முற்பகல் 10.30 தொடக்கம் பிற்பகல் 12.30 வரைக்கும் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஶ்ரீஞானவைரவர் ஆலய நிர்வாகத்தினரால் இ.பரராஜசிங்கத்தின் திருவாதவூரடிகள் புராணம் (பயன்) ஒலிப்பதிவு இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அன்றையதினம் குரு ஆதீன முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இ.பரராஜசிங்கத்திற்கு சிவநெறிப்புலவர் என்னும் பட்டத்தினை வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்ததனைப் படத்தில் காணலாம்.

## மாணவிகள் மீது தாக்குதல்

மாத்தறை மாவட்டத்தில் முஸ்லிம் மாணவிகள் மூவர் இனந் தெரியாதோரினால் நேற்று மாலை தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வகுப்பு முடிந்து வீடு திரும்பும் போது மாத்தறை மகாஎாம பாலத்தின் அருகில் வைத்து தடிகளுடன் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் சிலர் இவர்களைத் தாக்கியதோடுஇனிமேல் ஹிஜாப், அபாயா அணியக்கூடாது என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யக் கூடாது என்றும் எச்சரித்துள்ளனர். (அ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரம் முன்பள்ளி கட்டடத்தில் நடைபெறவுள்ளதாக செயலாளர் ம.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (அ)

## கடந்தவாரம் 167 பேர் பொலிஸாரால் கைது

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் 167 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் பிரிவு சிரேஷ்ட அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்துள்ளார்.

இவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 32 பேரும் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட 10 பேரும் வீதி விபத்தினை ஏற்படுத்திய 2 பேரும் பிறருக்கு அடித்துக் காயமேற்படுத்திய 30பேரும் சந்தேகத்தின் பேரில் 20பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 14 பேரும் ஏனைய குற்றச்சாட்டுக்களில் 53 பேரும் களவில் ஈடுபட்டமை, பொது இடத்தில் மது அருந்தியமை, சூழல் மாசடைவினை ஏற்படுத்தியமை, கொலை தொடர்பில் தலா ஒவ்வொருவரும் கைது செய்யப்பட்டதோடு பாதுகாப்புக்கோரி ஒருவர் சரணடைந்ததாகவும் அவர் கூறினார். (அ-4)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# இறைவனிடம் மன்னிப்புக் கேட்போம்; பிறரின் மனமாற்றத்தில் மகிழ்வோம்



ஊதாரி மைந்தனின் உவமைக்கதை இன்று வேதாகமப் பகுதி சிந்திப்பதற்காக தரப்படுகின்றது. ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள்.இளையவர் தந்தையை நோக்கி சொத்தில் எனக்கு உரிய பங்கை தாரும் என பெற்று சென்று தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார். அங்கு தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். பின்பு பன்றிகள் தின்னும் நெற்றுக்களால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார்.

ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. கடவுளுக்கும் தந்தைக்கும் எதிராக பாவம் செய்தவற்றை உணர்ந்து தந்தையிடம் திரும்பி வரும் போது தொலைவில் வந்து கொண்டிருந்த போதே அவர் தந்தை அவரைக் கண்டு பரிவு கொண்டு ஓடிப்போய் அவரைக் கட்டித்தழுவி முத்தமிட்டார்.

ஊதாரி மகன் எந்த அளவுக்கு தன் சொத்துக்களை அழிப்பதில் ஊதாரியாக இருந்தானோ அந்த அளவுக்கு அன்பு காட்டுவதிலும் இரக்கம் அளிப்பதிலும் ஊதாரியாக இருந்தார். தந்தை இன்று சினம் கொண்டு விருந்தில் கலந்து கொள்ளாமல் வெளியே நின்ற மூத்த மகனைப்பற்றிச் சிந்திப்போம்.

இளைய மகன் கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் என்று ஒத்துக் கொள்கிறான். ஆனால் மூத்த மகனோ வெளிப்படையாக எந்த பாவமும் செய்யவில்லை. மாறாக தந்தையின் பரிவை கண்டு சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாது வெளியே நிற்கிறார். தந்தை வந்து உள்ளே வருமாறும் கெஞ்சிக் கேட்டும் உள்ளேயே செல்லவில்லை. மாறாக தந்தையின் மன்னிப்பில் குறை காண்கிறார்.

குற்றம் சாட்டுகிறார். இந்த மூத்த மகன் தண்டிக்கப்பட்டதாகவோ தந்தையால் கடிந்து கொள்ளப்பட்டதாகவோ உவமைக் கதையில் சொல்லப்படவில்லை. இருப்பினும் பொறாமை, சினம், தந்தைக்கு அவமதிப்பு, தம்பியின் மனமாற்றத்தில் மகிழாமை, தந்தையை குறை காணும் மனநிலை எனப் பல்வகைப் பாவங்கள் இவர் செய்துள்ளார் என்பது வெளிப்படை. நாமும் சில வேளைகளில் இறைவனின் இரக்கத்தில் எரிச்சல் கொள்கிறோம். மனமாற்றம் அடைவோரைக் கண்டு கேலி செய்து இறைவனையே அவமதிக்கிறோம். இத்தவக்காலத்தில் இறைவனிடம் வருந்தி மன்னிப்புக் கோருவோம். பிறரின் மனமாற்றத்தில் மகிழ்வோம்.


ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

385



## மாமியார் மருமகள் சண்டை

எந்தவேளையில் அனுசுயா கணவன் வீட்டில் காலடி எடுத்துவைத்தாளோ தெரியவில்லை வந்த நாள் முதல் அவளுக்கும் அவள் மாமியார் பார்வதிக்கும் எப்போதும் சண்டை உண்டாகிக்கொண்டேயிருந்தது. அனுசுயா என்றாவது புதுப்புடைவை உடுத்தி தலையில் பூச்சூட்டி நன்கு அலங்காரம் செய்துகொண்டு தன் சிநேகிதிகளுடன் சிரித்துக்கும்மாளம் அடித்தால் உடனே பார்வதி இது என்ன வீடா? இல்லை நாடக அரங்கா? குடும்பப் பெண்கள் இப்படியா சீவிச் சிங்காரம் செய்வாள் என்பாள்.

நான் எப்படியிருந்தால் உங்களுக்கென்ன? போசமல் வாயை மூடிக் கொண்டு இருங்கள் என்று அனுசுயா திமிராகப் பதில் சொல்வாள்.

இப்படி இருவரும் தினம் சண்டை பிடிக்க நடுவில் அனுசுயா கணவன் ஆனந்தன் பாடு திண்டாட்டமாகியது. ஒருநாள் மாலை ஆனந்தன் தான் விவசாயம் செய்யும் வயலுக்கு அருகிலேயே அமர்ந்து தன்னுடைய பிரச்சினையைப்பற்றியும் இதை எப்படித்திர்ப்பது என்பது பற்றியும் சிந்தனை செய்துகொண்டிருந்தான்.

### அம்புலிமாமா கதைகள்

அப்போது அவனுடைய நண்பர்களான ராமனும் பீமனும் அந்தப் பக்கம் சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் கவலையுடனிருந்த ஆனந்தனை நோக்கி என்னவிடயம் என்று கேட்க ஆனந்தன் தன் வீட்டில் தன் தாயும் மனைவியும் தினம் சண்டை போட்டுக் கொள்வதைப் பற்றிச் சொல்லி வருந்தினான்.


பின்பு அவர்களிடம் எங்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டான்.

அதற்கு ராமன் பக்கத்துக் கிராமத்தில் ராமநவமியை ஒட்டி நாடகம் நடக்கவுள்ளது. அதில் நாங்கள் இருவரும் வேடம் அணிந்து நடிக்கப் போகிறோம் என்றான். பின்பு பீமன் ஆனந்தனை நோக்கி ஆனந்தா! உன் தாயும் மனைவியும் அடிக்கடி சண்டை போடுவதை நினைத்து வருத்தப்படாதே விரைவிலேயே உன் பிரச்சினை தீர்ந்து விடும் என்று ஆறுதல் அளித்தான்.

ராமனும் ஆமாம் ஆனந்தா கவலையை விடு. பீமன் சொல்வது போல் உன் பிரச்சினை விரைவிலேயே சரியாகிவிடும் என்று கூறி இருவரும் விடைபெற்றனர்.

ஒருவாரம் கழிந்தது. அன்று பௌர்ணமி இரவு. வீட்டில் ஆனந்தன், அவன் மனைவி, அவள் தாய் அனைவரும் உறங்கிக்கொண்டு இருந்தனர். திடீரென அவர்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் ஏதேதோ கூக்குரல் கேட்க அதில் அனுசுயாவும் பார்வதியும் விழித்துக்கொண்டனர். இருவரும் விரைந்து பின்புறம் சென்றனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி திடுக்கிடச் செய்தது.

கிணற்றடியில் அதிசய உருவம்



கொண்ட இரண்டு பிசாசுகள் நின்று கொண்டிருந்தன. பிசாசுகளைக் கண்டு கூச்சலிடப்போன பார்வதியையும் அனுசுயாவையும் நோக்கி அந்தப் பிசாசுகள் பயப்படாதீர்கள். உங்களை ஒன்றும் செய்யமாட்டோம். இதோ பார் எங்கள் கையிலுள்ள மூட்டையை. அதில் நகைகள் உள்ளன. எந்த வீட்டில் மாமியார் மருமகள் சண்டையிடாமல் ஒற்றுமையாக இருக்கிறார்களோ அவர்களுக்கு இதைப் பரிசாக அளிக்கத் தீர்மானித்து இந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டையும் அலசி ஆராய்ந்து வருகிறோம் என்றன.

இதைக்கேட்டதும் ஆச்சரியம் அடைந்த பார்வதி உங்களுக்கு இந்த நகைகள் எப்படிக் கிடைத்தன? என்று கேட்டாள். அதற்கு ஒரு பிசாசு நாங்கள் காட்டில் உலாவிக் கொண்டிருந்தபோது சில திருடர்கள் எங்களைக் கண்டு பயந்து இந்த நகை மூட்டையை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். இதை நாங்கள் வைத்துக் கொண்டு என்ன செய்வது? என்றது. உடனே அனுசுயா யாராவது ஏழைகளுக்குக் கொடுக்கலாமே? ஏன் மாமியார் மருமகளைத் தேடி அலைகின்றீர்கள்? என்று கேட்டாள். மற்றொரு பிசாசு அம்மா நாங்கள் போன பிறவியில் உங்களைப்போலவே மாமியாரும் மருமகளுமாக இருந்து ஓயாது சண்டைபோட்டுக்கொண்டிருந்தோம். எங்கள் வீட்டுக்கு முன்புறம் ஒரு மரத்தடியில் ஒரு சாமியார் எப்போதும் தவம் செய்து கொண்டிருந்தார். எங்கள் சண்டையினால் அவரால் தவம் செய்யமுடியாமல் போக அவர் கோபம் கொண்டு எங்கள் இருவரையும் பிசாசுகளாகப் போகும்படி சபித்துவிட்டார்.

நாங்கள் இருவரும் அவர் காலில் விழுந்து மன்னிக்குமாறு கெஞ்சினோம். அதனால் அவர் எந்த வீட்டில் ஒற்றுமையாக வசிக்கும் மாமியார் மருமகளுக்கு நன்மை செய்கிறீர்களோ அப்போது உங்கள் சுய உருவம் கிடைக்கும் என்றார். அதிலிருந்து ஒற்றுமையாக உள்ள மாமியார் மருமகளைத் தேடி அலைகிறோம் என்றது.

உடனே பரபரப்படைந்த அனுசுயா நாங்கள் இருவரும் இனிமேல் சண்டையே போடாமல் இருப்போம். எங்களுக்கு நகை மூட்டையைக் கொடுத்துவிடு என்று கெஞ்சினாள்.

அதுதான் நடக்காது என்ற ஒரு பிசாசு நாங்கள் ஒரு மாதம் கழித்து மீண்டும் இதேபோல் பௌர்ணமி அன்று வருவோம். இந்த ஒரு மாதம் நீங்கள் ஒற்றுமையாக இருக்கிறீர்களா என்று தினம் உங்களைக் கண்காணித்து வருவோம். இந்த நகைகளைப் பெற வேண்டும் என்ற பேராசையின் பொருட்டு அன்றி உண்மையாகவே நீங்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் இருந்தால் அடுத்த பௌர்ணமி அன்று இது உங்களுக்குக் கிடைக்கும் எனக்கூறி பிசாசுகள் வெளியேறின.

அன்று முதல் பார்வதியும் அனுசுயாவும் சண்டைபோடுவதை அடியோடு நிறுத்திவிட்டு மிக ஒற்றுமையாக இருக்கப் பழகத் தொடங்கினர். இவ்வாறு ஒரு மாதம் கழிந்தது. மீண்டும் பௌர்ணமி இரவு வந்தது.


அனுசுயாவும் பார்வதியும் பரபரப்பின் உச்சத்தில் இருந்தனர். கண்கொட்டாமல் விழித்துக் கொண்டு அந்தப் பிசாசுகளின் வருகையை எதிர்பார்த்துக் கிணற்றடியில் அவர்கள் காத்திருந்தனர். ஆனால் நேரம் சென்று கொண்டேயிருந்ததே தவிர பிசாசுகள் வரவேயில்லை.

ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு பார்வதி மருமகளே! உண்மையாகவே ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டினால்தான் உங்களுக்குப் பரிசு அளிப்போம் என்றன அந்தப் பிசாசுகள். ஆனால் அந்த நகைகள் கிடைக்கவேண்டுமே என்ற பேராசை எனக்கு அடிக்கடி வந்ததுண்டு. அதனால்தான் அவை வரவேயில்லை எனத் தோன்றுகிறது என்றாள்.

அதற்கு அனுசுயா அம்மா! எனக்கும் அப்படித்தான் பேராசை வந்ததுண்டு. அதனால்தான் அந்தப் பிசாசுகள் வரவில்லை என உறுதியாகிறது. அந்த நகைகளை மறந்து விடுவோம்.

இந்த ஒரு மாதம் நாம் எவ்வளவு ஒற்றுமையாக, மகிழ்ச்சியாகக் கழித்தோம்? அதுபோல் இனிமேல் நாம் இருவருமே இப்படியே இருந்துவிடலாமே என்றாள்.

நீ சொல்வதே சரி. நாம் இனி வரும் நாட்களில் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் உண்மையான அன்புடன் பழகுவோம் என்று பார்வதி தன் மருமகள் அனுசுயாவிடம் கூறினாள்.




இதையெல்லாம் கேட்ட ஆனந்தன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். ஆனால் அவர்கள் மூவருக்குமே தெரியாத ஒன்று என்ன தெரியுமா? ஒரு மாதம் முன்பு அவர்கள் வீட்டுக்கு வந்த இரண்டு பிசாசுகள் அல்ல! பிசாசுகள் வேடமணிந்து வந்த ஆனந்தனின் நண்பர்களான ராமனும் பீமனும் என்பதே!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**01**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



**முரண்பாடு**



போதிமரம் போ
புத்தனைப் புதை
கொடிகள் காப்ப
தேசத்துக்குத் தீ
சின்னங்கள் முக்கியம்
சித்தாந்தம் எரித்துவிடு
கவிஞனுக்குச் சிலை
கவிதைக்குக் கல்லறை

-வைரமுத்து-

...மரம் இழந்த குளத்தங்கரை வெறுமையை உடுத்திருந்தது. சின்னப்பாண்டி, எமிலி, இஷிமுரா மூவரும் நடைப்பயிற்சி கொண்டார்கள் குளக்கரை மீது. அரைக்குளம் நிறைந்திருந்தது.

அப்போது, பூமி நனைந்து கொண்டிருந்தது அந்தியின் தங்க ஒழுக்கலில் உடம்பில் உட்கார்ந்து உட்கார்ந்து கடந்து கொண்டிருந்தது குளத்தில் குளித்துவந்த ஈரக்காற்று.

ஒற்றை நாற்காலியிட்டு தூரக் கரையில் அமர்ந்திருந்தான் ஒரு மனிதன்.

அடிக்கடி வான் பார்ப்பதும், குளத்தில் ஒரு கல்லெறிவதும், வெறியோடு பேனா எடுத்து விறுவிறுவென எழுதுவதும், சட்டென்று நிலைகுத்தி நிற்பதுமாய்த் தனக்கான தனி உலகத்தில் இயங்கிக் கொண்டிருந்தான் அந்த மனிதன்.

சற்றே திகைப்புற்றவளாய், "யார் அந்த மனிதன்?" என்றாள் எமிலி.

"எங்கள் தமிழ்மொழியின் கவிஞர் களுள் ஒருவர்" என்றான் சின்னப்பாண்டி.

"பெயர்...?"

"வைரமுத்து"

"பேசலாமா?"

"பேசலாம்"

மூவரும் நடந்தனர் வைரமுத்துவை நோக்கி.

☆☆☆☆☆

**வை**ரமுத்துவைப் பார்த்து "வணக்கம்" என்றான் சின்னப்பாண்டி.

"வணக்கம்; யார் நீங்கள்?"

"என் பெயர் சின்னப்பாண்டி; ஊர் அட்டணம்பட்டி; பல்கலைக்கழகத்து வேளாண்மை மாணவன்"

"ஓ... கேள்விப்பட்டேன். ஊர்மாற்றம் செய்யும் அந்த இளைஞர் நீங்கள் தானா? வாழ்த்துக்கள்" என்றாவர், "என் பெயர் வைரமுத்து; எழுதுவது என் வாழ்வு. நீங்கள் யார்?" என்றார் இஷிமுராவை நோக்கி.

"என் பெயர் இஷிமுரா; ஜப்பானியன்; இயற்கை விவசாயி மகன்" என்றவன் வழக்கம் போல வணங்கினான் முப்பது டிகிரியில் வளைந்தபடி. அவனுக்கு ஒரு தமிழ்க் கும்பிடு போட்டுவிட்டு "நீங்கள்...?" என்றார் எமிலியை நோக்கி.

"என் பெயர் எமிலி; அமெரிக்கன்; சுற்றுச்சூழல் பட்டதாரி; இயற்கையின் சேவகி" என்றவள் புன்னகையில் முற்றுப்புள்ளி வைத்தாள்.

"உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. நான் கற்றுக்கொள்ள உங்கள் மூவரிடமும் செய்திகள் உண்டு என்று என் உள்ளுணர்வு சொல்லுகிறது"

"நீங்கள் உட்காருங்கள்" என்றான் சின்னப்பாண்டி.

"உங்களை அமர்த்தி வைக்க என்னிடம் நாற்காலிகள் இல்லாதபோது நானும் நிற்பதே நாகரிகம்; நிற்போம்"

எழுதுகோலும் ஏடும் மூடி வைத்தவர், "வேர்க்கடலையும் சுக்குநீரும் வைத்திருக்கின்றேன்; விரும்பினால் பகிர்ந்துகொள்ளலாம்" என்று கூடை கொடுத்தார் சின்னப்பாண்டியிடம்.

விருப்பத்தோடு வேர்க்கடலை தின்றவர்கள் தயக்கத்தோடு சுக்குநீர் பருகி, "காரமாய் உள்ளது; ஆனால், நன்று" என்றார்கள்.

"நன்றி" என்ற சின்னப்பாண்டி.

"இங்கே நீங்கள் அடிக்கடி வருவீர்களா?" என்றான்.

வாய்விட்டுச் சிரித்த வைரமுத்து, "கேள்வியே தவறு" என்றார்.

"இங்கிருந்துதான் அடிக்கடி சென்னைக்குச் செல்கிறேன். நான் புறப்பட்ட இடம் இதுதான். என் வாழ்வின்- படைப்பின் நதிமூலம் இதுதான். சென்னை என்பது எனக்கு மொழியின் தொழிற்சாலை; என் கிராமம்தான் பாடசாலை. அந்த மேற்



குத் தொடர்ச்சி மலையை மாதம் ஒரு முறை வந்து நலம் கேட்காவிட்டால் பைத்தியம் பிடித்துவிடுமெனக்கு"

"இயற்கையின் சௌந்தர்ய உபாசனைதான் கவிகளுக்கு மூலமா?" என்றாள் எமிலி.

"இயற்கை என்பது வெறும் சௌந்தர்யம் மட்டுமில்லை எமிலி. இயற்கையின் பெருமையே மனுடத்திற்கான அதன் தியாகம்தான். இயற்கையும் மனிதனும் வேறு வேறன்று. **இயற் கையின் சிறு பிரதிதான் மனிதன்; மனிதனின் பெரும்பிரதி தான் இயற்கை.** இயற்கை என்பது மலைகளும் நதிகளும் மரம் செடி கொடிகளும் மட்டுமல்ல. அந்தப் பருப்பொருள்களுக்குக் கீழே படிந்திருக்கும் ரகசியம்தான் இயற்கை; மனித வேர்களின் கீழே கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் கசியும் கருணைதான் இயற்கை. இயற்கையின் மொழியைப் புரிந்து கொள்ளும் யுக முயற்சியிலேதான். காலம் இறந்து கொண்டேயிருக்கிறது; கலை இறவாமலிருக்கிறது"

"இயற்கை உங்களோடு எந்த மொழியில் பேசுகிறது? இயற்கையோடு நீங்கள் எந்த மொழியில் பேசுகிறீர்கள்?" என்றான் இஷி.

"மௌனம் என்னும் உலகமொழியில் இயற்கை பேசுகிறது என்னோடு. என்தாய்மொழியில் பேசுகிறேன் இயற்கையோடு"

"என்னதான் பேசுவீர்கள் அந்த மேற்குத் தொடர்ச்சி மலையோடு?" எமிலியின் கண்களிலும் கேள்வியிலும் ஆர்வம் மின்னியது.

"கோடி கோடி ஆண்டுகளாய்த் தாய்ப்பால் வற்றாத தாயே! உன் பாலகன் வந்திருக்கிறேன் பார்! என்பேன். மேகங்கள் உறங்கிப் போகத்தான் உன் மடியில் அந்த மேடுபள்ளத் தொட்டில்களா என்று ஒவ்வொரு முறையும் கேலி செய்வேன். உன்னை நம்பித்தான் ஒரு சமவெளி இருக்கிறது. எந்த நூற்றாண்டிலும் ஏமாற்றிவிடாதே என்று கெஞ்சுவேன். சில கோடி ஆண்டுகளாய் இந்தச் சமவெளியின் ஜனன மரணங்களை- யுத்தத்தின் ரத்தத்தை- வெற்றியின் புன்னகையை -தோல்வியின் கண்ணீரை- சரித்திரத்தின் அவமானங்களை- வாழ்வின் பெருமிதங்களை நின்று பார்த்துக் கொண்டிருக்கும் நெடும்சாட்சியே... என் நீலமணி வாய்திறந்து எங்கள் பூர்வகதை சொல்வாயா என்று பாட்டியிடம் கதை கேட்கும் பேரனைப் போல் நச்சரிப்பேன். உன் சிகரத்தில் ஏறிமடியில் விழுந்து மடிந்து போகட்டுமா என்று கிறுக்குத்தனமாகக் கேட்பேன்"

"எப்படி வந்தது இத்துணை பாசம் மலைமீது உங்களுக்கு?" என்றான் இஷி.

"முதியவர் மீதும் முதுபொருள் மீதும் எப்போதும் கூடுதல் பாசம் கொட்டும் எனக்கு, இந்த மேற்குத் தொடர்ச்சிமலை எங்கள் மண்ணின் முதுபொருள் மட்டுமல்ல- முதற்பொருளும்கூட"

"எப்படி...? எப்படி?" என்றாள் எமிலி.

"ஆப்பிரிக்காவின் மடகாஸ்கரோடு ஒட்டியிருந்த எங்கள் நிலப்பரப்பு பதினைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு பிய்த்தெறியப்பட்டது. அதன் பிறகு புவியியல் கலகங்களால் நேர்ந்த எரிமலைப் பெருவெடிப்பில் எட்டுக் கோடி ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் மலை உண்டானது.

முதுமையால் வருகிற பாசமும் மூடநம்பிக்கைதான்!" என்றான் இஷி.

"இல்லை. பயன்பட்டதும் பயன்படுவதும்தான் பாசம். எத்துணையோ லட்சம் ஆண்டுகளாய் எங்கள் உதிரத்தின் தொடர்ச்சியாய் இந்த நதி ஓடிக்கொண்டேயிருக்கிறது. மனிதர்கள் தோன்றுமுன்பே மலை தோன்றிவிட்டது. மலை தோன்றிய போதே நதி தோன்றிவிட்டது. சமூக நோக்கமுள்ள இளைஞனே... சின்னப்பாண்டி... எனக்கோர் ஆதங்கம்"

"சொல்லுங்கள்"

"இமயமலையின் வனவளம் பாதுகாக்கப்பட்ட அளவுக்கு மேற்குத் தொடர்ச்சி மலையின் வனவளம் பாதுகாக்கப்படவில்லை. இது இந்திய அரசு மீது எனக்குள்ள ஆதங்கம்.

இமயமலை உங்கள் தேசத்தின் போர் எல்லை அல்லவா? அதனால் அது பெரிதும் பாதுகாக்கப்படுகிறது. தவிரவும் இமயமலை கங்கையின் கருவறை; அது கூடுதல் கவனம் பெறுதல் தவறல்லவே!" தன் வாதத்தை மெல்லிய மொழியில் எடுத்து வைத்தாள் எமிலி.

"உண்மை இமயமலையை இங்கிருந்தே வணங்குகிறேன். ஆனால், இந்தியாவின் அறுபது சதவிகிதத்தை நனைக்கும் நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலேதான் ஊற்றெடுக்கின்றன என்ற உண்மையை அதிகார வர்க்கம் மறந்திருக்கலாம்; உழைக்கும் வர்க்கம் மறப்பதில்லை"

"கேளாத தகவல் இது. எங்களுக்கு மேற்குத் தொடர்ச்சி மலையின் பெருமை சொல்லுங்கள்"- ஆர்வத்தில் வார்த்தைகள் துடித்தன சின்னப்பாண்டிக்கு.

## இயற்கையின் சிறுபிரதிதான் மனிதன்; மனிதனின் சிறுபிரதிதான் இயற்கை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வை இந்தியாவே பெற்றுக்கொடுக்க வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

**ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இந்திய அரசு இலங்கையில் நடைபெற்ற அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களையும் குறித்து ஒரு சுயேட்சையான நம்பிக்கைக்குரிய விசாரணையைக் கோர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரெங்கராஜன் தெரிவித்துள்ளார்.**

இந்திய மாநிலங்களவையில் நேற்று முன்தினம் இலங்கைத் தமிழ் மக்களின் அவலங்கள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் அறிக்கை தாக்கல் செய்து உரையாற்றினார்.

பின்னர் அதன்மீது விவாதத்தில் கலந்து கொண்ட அவர் குறிப்பிடுகையில்,

இலங்கைத் தமிழ் மக்களின் அவல நிலை குறித்து தமிழ்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உணர்வுகளும் கோபாவேசமும் இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளாலும் முழுமையாக பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதில் இந்த அவை ஒருமித்த கருத்தினைக் கொண்டிருக்கிறது.

தமிழர்களின் இன்னல்கள் குறித்து கடந்த மூன்றாண்டுகளாக இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்போது பாலச்சந்திரனின் புகைப்படத்தை தொலைக்காட்சி அலைவரிசைகளில் பார்த்தோம். மிகக் கொடூரமான கொலை. தொலைக்காட்சிகளில் இதனைப் பார்த்த மக்கள் கதறிஅழுதார்கள். பார்க்கும் போதே அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

இலங்கையை நம்முடைய நட்பு நாடு என்று கூறிக் கொண்டிருக்கிறோம். இதே உறவினை நாம் அவர்களுடன் தொடர வேண்டும்தான். இதுதான் நம் நிலைப்பாடும் ஆகும். இலங்கையுடனான நம் உறவினை வெட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

ஆனால், அதேசமயத்தில் இலங்கை, இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை, ராஜீவ் காந்தி- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை அமுல்படுத்த இலங்கை மறுக்கிறது. அதைத் தட்டிக் கேட்க ஐ.மு.கூ. அரசு ஏன் தயங்குகிறது? இதனால் இந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை குறைகிறது.

இந்த அரசாங்கம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்கிறது. ஏன் உங்களால் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியவில்லை? இந்தப் பின்னணியில்தான் மத்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் வலுவாக தலையிட்டு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை மீது ஓர் அரசியல் தீர்வுக்கு வர தன் இராஜதந்திர உறவுகளைப் பயன்படுத்தி இலங்கை அரசை வலுவாக நிர்ப்பந்தத்திட வேண்டும்.

அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இந்திய அரசு இலங்கையின் வட பகுதியில் யுத்தம் நடைபெற்ற சமயத்தில் அங்கே நடைபெற்ற அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களையும் குறித்து ஒரு சுயேட்சையான உயர்மட்ட நம்பிக்கைக்குரிய விசாரணையைக் கோர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(மானிப்பாய்)

சீரற்ற காலநிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய இவ் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியும் மைதானத் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் ந.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மைதானத்தை திறந்து வைக்கவுள்ளார். (அ-3-23)

* * * * *

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் வேம்பிராய் வீதியில் உள்ள பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக சாவகச்சேரி நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸ்சாண்டர் சாள்ஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-29)

# யா/செங்குந்த இந்துக் கல்லூரி தேசிய மட்டத்தில் 3 ஆம் இடம்

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நடன நாட்டியக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த அரச நடன விழா 2012 நடனப் போட்டியில் 12 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவில் யா/ செங்குந்த இந்துக் கல்லூரியில் இருந்து பங்கு பற்றிய நடனம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளதாக அதிபர் ஆர். பாலகுமார் அறிவித்துள்ளார்.(அ)

# கரப்பந்தாட்ட போட்டியில் நவஜீவன்ஸ் சம்பியனானது

(கரவெட்டி)

குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் மின்னொளியிலான கரப்பந்தாட்ட இறுதி ஆட்டத்தில் தும்பளை மாதனை அணியை தோற்கடித்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனாகியது.

உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ்.மாவட்ட ரீதியிலான மின்னொளியிலான 5 பேர் கொண்ட கரப்பந்தாட்ட போட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கழக தலைவர் எஸ்.ஜெனன் தலைமையில் நடைபெற்றது.

இவ் இறுதி ஆட்டத்தில் தும்பளை மாதனை அணியை 18:10 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் கரணவாய் சந்திரோதயா அணியை தோற்கடித்து குடத்தனை வெண்மதி அணி மூன்றாம் இடத்தை பெற்றது. (அ-3-24)

# கரப்பந்தாட்ட சங்க நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாகக் கூட்டமும் உறுப்பினர்கள் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவராக கி.மனோகரன், உப தலைவராக சி. அப்பாத்துரை சயந்தன், செயலாளராக ந. சுரேஸ்குமார், உப செயலாளராக நாகேந்திரன், பொருளாளராக குமாரசுவாமி, நிர்வாக சபை உறுப்பினர்களாக செல்வதீபன், தினேஸ், தயாளபாலன், சிவகணேசன், றஜித் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ)

# ஆன்மீக குரு அருள்திரு அடிகளாரின் 73 ஆவது அவதார பெருமங்கலவிழா



உலகிலுள்ள தெய்வங்கள் அனைத்தையும் படைத்து அவையனைத்திற்கும் தாய்த் தெய்வமாக இனம் , மதம் மொழிகளைக் கடந்து விளங்கி வருகின்ற அன்னை ஆதிபராசக்தி கலியுகக் கேடுகளிலிருந்து ஆன்மாக்களை ஈடேற்றுதற் பொருட்டு ஆன்மீக குரு ஆச்சார்ய பீட நாயகர் அருள்திரு அடிகளார் மூலமாக மானுட உருவில் அவதாரம் செய்து அருள்வாக்கு வழங்கி அருளாட்சி புரிந்து வருகின்ற திருத்தலமே மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்திபீடம்.

இராமர் , கிருஷ்ணர் போன்ற அவதார புருஷர்கள் வாழ்ந்த காலப் பகுதியில் நாம் பிறந்து வாழுகின்ற பாக்கியத்தைப் பெற்றிராவிடினும் இன்று அவர்களுக்குக் கோயில்கள் அமைத்து தெய்வங்களாக வழிபட்டு வருகின்றோம். அவ்வாறே அன்னை ஆதிபராசக்தியும் அவதாரமாகி அடிகளார் ரூபத்தில் அருள் பாலிப்பதை உணர்ந்த அடியவர்கள் அம்மா தெய்வம் என்பதை ஏற்றுக் கொண்டு அம்மாவிற்குப் பாதபூஜை செய்தும் அவர்களின் அருள்வாக்குகளைக் கேட்டும் அவரவர் ஊழ்வினை முடிச்சுக்களை அகற்றி வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

அன்றைய காலம் முதல் இன்றைய காலம்வரை அதர்மம் ஓங்குகின்ற பொழுது தர்மத்தை நிலைநாட்ட தெய்வம் மனித உருவிலே சித்தராக, மகானாக அவதாரமாகி மக்களுக்கு அருள்பாலித்த வரலாறுகள் அனைவரும் அறிந்த உணர்ந்த உண்மையாகும்.

மேல்மருவத்தூரில் ஆதிபராசக்தி சித்தர் ஆன்மீக குரு அருள்திரு அடிகளார் அவதார காலத்தில் நாமும் பிறந்து அவர்களின் வழிமுறையோடு தொண்டாற்றவும் ஆசிபெறவும் கிடைத்த வாய்ப்பு நாம் பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியமே ஆகும். மனித மனங்களின் சரணாலயம் மேல்மருவத்தூர் என்பதை உலகுக்கு உணர்த்திய மகான் ஆன்மீக குரு ஆச்சார்ய பீட நாயகர் அருள்திரு அடிகளார். அம்மாவின் அவதார நாளானது வருடந் தோறும் பங்குனித் திங்கள் மூன்றாம் நாளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு அவதாரங்களுமே சில நோக்கங்களை நிறை வேற்ற வேண்டி இப்பூவுலகிலே வந்துதிக்கின் றனர். அம்மாவின் அவதார நோக்கங்களாக, தெய்வ நம்பிக்கை, தெய்வ பக்தி, ஆன்மீக உணர்வுகளை ஊட்டுதல், பெண் குலத்தை ஆன்மீக வழியில் உயர்த்துதல், அடித்தளமக்களை ஆன்மீகவழியில்உணர்த்துதல் , அருள்திரு அம்மா ஆன்மீகப் பண்பாடு மற்றும் சமுதாயத் தொண்டிற்கான மையங்களாக ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடங்கள், வழிபாட்டு மன்றங்கள், வார வழிபாட்டு நிலையங்களை உருவாக்கி வருகின்றார்கள்.

அதிகாரம் , தவறான வழியில் வந்த செல்வம், சிற்றின்பம் ஆகியவற்றுடன் கூடிய சக்கரச் சுவட்டிலிருந்து தூய்மை, எளிமை மற்றும் தெய்வீகம் என்ற வாழ்விற்கு மனிதர்களை மாற்றியமைக்கின்ற பெருங்கருணை மிகு வள்ளலான அம்மா தொண்டு என்பதே அவரது தத்துவத்தின் கிரீடம். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மற்றும் நசுக்கப்பட்ட பிரிவினரின் மேம்பாட்டிற்காகப் போராடுவதோடு பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றார். எங்குமே நடைபெறாத அள வில் மிக்க ஒழுங்கமைப்பில் அம்மாவால் செய்யப்படுகின்ற யாகங்கள், கலசவிளக்குப் பூசைகளால் இயற்கை அன்னை மற்றும் இப்பிரபஞ்சமே தூய்மைப் படுத்துகின்றன. பஞ்ச பூதங்களைக் கட்டுப்படுத்தி, தியானத்தின் மூலம் தன்னையறிதலை வலியுறுத்துவதோடு தொண்டு என்பதே வீடுபேற்றிற்குரிய சாவியாகும் என்கின்ற தாரக மந்திரத்தை உலகறியச் செய்கின்றார். அம்மா இல்லறத்தில் இருந்தாலும் இமா சல பகுதியிலுள்ள சாதுக்கள், யோகிகள், சந்நியாசிகள் மற்றும் நவநாத சித்தர் களுக்குத் தலைவராக உள்ளார். ஆன்மீக குரு அருள்திரு பங்காரு அம்மா நம்மை யெல்லாம் கலியுகக் கேடுகளிலிருந்து மீட்பதற்காக இப்பூவுலகிலே அவதாரம் செய்த நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் அனைவரும் ஒன்று கூடி அடிகளாரின் 73 ஆவது அவதாரத் திருநாளினைக் கொண்டாடுவோம். அவரின் அருள் மழையில் நனைந்து எல்லோரும் இன்புறுவோம்.

**ஓம் சக்தி!**
அன்னையின் பணியில்,
ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கம்,
யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கெதிரான ஜெனீவா தீர்மானம் எமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும்

## நம்புகிறேன் என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி

(மட்டக்களப்பு)

**ஜெனீவா மனிதவுரிமை கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படும் தீர்மானமானது தமிழ் மக்களின் அபிலாசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பெற்றுத்தர வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்று எமது இளைஞர்கள் இந்த மைதானத்திலே காற்பந்தாட்டத்தை ஆடினார்கள். ஆனால் எதிர்வரும் பங்குனி மாதம் ஜெனீவா என்கின்ற மைதானத்திலே ஈழத்தமிழினம் என்கின்ற ஒரு பந்து இலங்கை அரசாங்கத்தினாலும் சர்வதேசத்தாலும் விளையாடப்படும் ஒரு நிலைமை இன்று உருவாகியுள்ளது.

எமது நாட்டிலே கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு நடந்த மனிதாபிமான நடவடிக்கைகள், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் தீர்ப்புக்கூறும் வகையில் ஜெனீவாவிலேயே மனிதவுரிமைக் கூட்டம் நடைபெறுகின்றது.

தமிழ்மக்களுக்கு இந்த நாட்டிலேயே பாரதூரமான அநீதி நடைபெற்றிருக்கின்றது என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து தீர்ப்பு கூறும் நிலைமை பங்குனி மாதம் உருவாகியுள்ளது.

இந்த உண்மையை அந்த அரசாங்கம் அறிந்தும்கூட எமது மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை வழங்குவதற்கு தயாராக இல்லை.

எங்கள் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும், சகல அபிவிருத்தியும் மக்களை சென்றடைய வேண்டும், எங்கள் மக்களின் வாழ்வுரிமையை சரியாக அமைத்துக் கொடுக்க வேண்டும், எமது மக்கள் அதற்காகத் தான் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்திருக்கிறார்கள் .

ஆனால் இந்த நாட்டிலே எமது மக்களுக்கு சேவையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம் வழங்குவதில்லை. அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளத்தான் நாங்கள் பல வழிகளிலும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

ஜெனீவாவில் கொண்டுவரப்படும் தீர்மானம் நிச்சயமாக அரசாங்கத்திற்கு எதிராகத்தான் அமையும். அதனை அறிந்து ஒரு அமைச்சருடன் அவர்கள் சார்பான குழுவை அனுப்பி வைத்துள்ளார்கள். ஆனால் ஜெனீவாவில் கொண்டுவரப்படும் தீர்வு மட்டுமே மக்களுக்கு தீர்வாக அமையாது.

எமது மக்களின் தேவைகளை இந்த அரசாங்கம் இன்னும் உணரவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான தீர்வை எமது மக்களுக்கு வழங்குங்கள் எனக் கோரிக்கை விடுத்தார். (அ-2)

# சேவை நலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் பிராந்திய பிரதேச முகாமையாளராக சேவைபுரிந்து நேற்று முன்தினம் 28 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற சி.பத்மநாதனின் சேவைநலன் பாராட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்திற்கென நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிதியத்தின் ஊடாக கல்வி ,சுகாதாரம் என்பவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படவுள்ளதோடு வறுமைக்கோட்டின் கீழ்வாழ்பவர்களுக்கு உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் இந்த சேவைநலன் பாராட்டு விழாவின் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சிலருக்கு உதவித் தொகைகளும் வழங்கப்படவுள்ளன. (அ-6)

# ஏகாம்பரம் வித்தியை தரம் உயர்த்துங்கள்

## செயற்குழு கூட்டத்தில் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கப்பூது ஏகாம்பர வித்தியாசாலையை தரம் உயர்த்தி தருமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக செயற்குழு கூட்டத்தில் அக்கிராமத்தில் இருந்து வந்த பொது பிரதிநிதி ஒருவர் கோரிக்கையை முன் வைத்தார்.

கப்பூது கிராமமானது யுத்த காலத்திற்கு முன்னர் சிறந்த விவசாய கிராமமாக இருந்ததுடன் அதிகளவான மக்களும் அங்கு வாழ்ந்து வந்துள்ளனர்.

யுத்த காலத்திற்கு பின்னர் அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களான கரணவாய், நெல்லியடி, கரவெட்டி பகுதிகளில் குடியேறினர்.

நீண்டகாலம் மேற்படி பகுதியில் வாழ்ந்தமையால் தற்போது கப்பூது கிராமத்திற்கு செல்ல அப்பகுதி மக்கள் பெரிதும் விரும்பவில்லை.

அதற்கு முக்கிய காரணங்களாக மின்சாரம், குடிநீர், போக்குவரத்து, முக்கிய தேவைகளை பூர்த்திசெய்யும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இன்மையால் அதிகளவான தூரத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

தற்போது அக்கிராமத்தில் 20 இற்கு உட்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களே அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

கப்பூது ஏகாம்பர வித்தியாசாலை அண்மையில் 5 ஆயிரம் பாடசாலை திட்டத்தின்கீழ் தரம் குறைக்கப்பட்டமையால் தற்போது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையுள்ள அப்பாடசாலையில் மூன்று மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர்.

அக்கிராமத்தில் மீண்டும் மீள்குடியேறி பழைய கப்பூது கிராமமாக அபிவிருத்தி செய்ய அனைவரும் முன்வர வேண்டுமெனவும் செயற்குழு கூட்டத்தில் அக்கிராம பொது பிரதிநிதி வேண்டுகோள் விடுத்தார்.

இதனால் ஒரு தரப்பினர் பாடசாலையை மூடுமாறும் மறுதரப்பினர் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்து தரம் உயர்த்துமாறும் செயற்குழு கூட்டத்தில் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதற்கு பதிலளித்த வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பாடசாலையை மூடும் அதிகாரம் தமக்கு இல்லை எனவும் தம்மாலான அபிவிருத்தி வேலையை அப்பாடசாலையில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அப்பாடசாலையை விருத்தி செய்து மேலும் தரம் உயர்த்துவது அப்பகுதி மக்களது மற்றும் வேறு துறைசார்ந்த அரச அதிகாரிகளினதும் கடமைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார். (அ-3-24)



மக்கள் வங்கியின் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் தேசிய ரீதியில் கணிதப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பாலகோபாலன் கபிலனுக்கு மக்கள் வங்கியின் பணப் பரிசான 50 ஆயிரம் ரூபாவினை அதிபர் எஸ்.தெய்வேந்திரராஜாவிடமிருந்து பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம். (படம்:- பருத்தித்துறை செய்தியாளர்)

# யுத்தத்தின் போது கைவிடப்பட்ட 1724 வாகனங்களே ஒப்படைப்பு

## மிகுதி வாகனங்கள் எங்கே? மக்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தின் போது மக்களால் முள்ளிவாய்க்கால் பகுதியில் இறுதியாக கைவிடப்பட்ட வாகனங்களில் ஆயிரத்து724 வாகனங்களே மாவட்ட செயலகத்தால் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய வாகனங்கள் கையளிக்கப்படவில்லை எனவும்அப்பகுதி மக்கள்விசனம்தெரிவித்துள்ளனர்.

கடந்த யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வாகனங்களில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மக்களின் ஆயிரத்து 724 வாகனங்களே கையளிக்கப்பட்டுள்ளன.

அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட தமக்கு கையளிக்கப்பட்ட வாகனங்களையாவது கையளித்தால் தொழில் முயற்சிக்கு உதவாதா? என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாகனங்களை கைவிடப்பட்ட நிலையில் ஏனையவர்களின் வாகனங்கள் எங்கே? எனக் கேள்வியெழுப்புகின்றனர். மேலும் மக்களின் வாகனங்களை இராணுவத்தினர் பயன்படுத்தி வருவதாகவும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இவ்விடயத்தில் கவனமெடுத்து உரியவர்களின் வாகனங்களை ஒப்படைக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# மாணவர்களுக்கான சைவசமய ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் சைவசமய பாடம் கற்கும் தரம் 6 தொடக்கம் தரம்11 வரையான மாணவிகளுக்கிடையே நடத்தப்பட்ட சைவசமய ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம் 6**

ச.லதுசகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ. பிரணவி(கச்சாய் அ.த.க பாடசாலை), பு.புவிதன்(கச்சாய் அ.த.க பாடசாலை)

**தரம் 7**

சி. பானுசா (மீசாலை வீரசிங்கம் ம. கல்லூரி), தே. உசா (நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்), ச. துசாந்தன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**தரம் 8**

த.மாதுரி (கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி), செ.ஜனார்த்தனன் (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி, க.தனுசா (கைதடி விக்னேஸ்வரா வித்தி

**தரம் 9**

த.துவாரகா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சி.டிலுசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ப.ரசிக்கா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**தரம் 10**

சி.சஜித்தா (கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை), ந.விதுஜனன் (விடத்தற்பளை கமலாசினி வித்தி), இ.பிரியங்கா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் 11**

ப.சங்கவி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வி.டலீனா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), தி.கிருஷாந்தி (மீசாலை வீரசிங்கம் ம.கல்லூரி)

**தரம் 12**

ச.தேனுஜா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த.கஜருதன் (மீசாலை வீரசிங்கம் ம. கல்லூரி), சி. பிருந்தா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

**தரம் 13**

ஆ.நிர்முஷா ( சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), வி. பிறேமவதனி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சு.சுமிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி)

இவர்களுக்கான பரிசில்கள் இம்மாதம் நடைபெறவுள்ள வைசமய பாடப் பரிசில் நாள் நிகழ்வில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் நிலையில், இலங்கை அரச படைகள் மீதான போர்க்குற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் ஒளிப்படச் சர்ச்சை ஓய்வதற்குள், புலிகளின் தகவல்களை அறிவதற்கு பாலியல் வல்லுறவை அரசபடைகள் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி

தமிழ்நாட்டில் இருந்து தெரிவு செய்யப்பட்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களே பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இலங்கைக்கு எதிராகச் செயற்பட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட அத்தனை கட்சிகளும், இடதுசாரிக் கட்சிகளும் இலங்கைக்கு எதிராகச் செயற்பட அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் அதற்கு முரணாகச் செயற்பட முடியாத நிலைக்குள் இந்திய மத்திய அரசு

அப்படிக் கருத்து வெளியிட்டவர்கள் பலரும் வாயைத் திறக்காமல் உள்ளனர்.


இப்போது ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்பட வேண்டும் என்று கூறியுள்ள ஒரே ஒருவர் அரசியல் கோமாளி என்று விமர்சிக்கப்படும் சுப்பிரமணியம் சுவாமி தான். அவரைவிட வேறு எவரும் இத்தகைய கருத்தை இதுவரை கூறவில்லை.

இதைவிட மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி ஜெனீவா தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவாக இருக்கும் என்று கூறி

வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கையை விட்டுக்கொடுத்து பேசவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். என்னதான் கோபமோ கவலையோ, இருந்தாலும் இலங்கை ஓர் எதிரி நாடு அல்ல என்று அவர் அழுத்தம் திருத்தமாக கூறியிருந்தார். அந்தளவுக்கு இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை மதித்து நடந்து கொள்ளவில்லை என்பது வெளிப்படை.

போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள்

# எட்டி உதைத்தாலும் இலங்கையைக் காக்க இந்தியாவின் இதயம் துடிக்கவே செய்கிறது!



யதாக குற்றம் சாட்டும் அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ளது.

141 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்ட 75 பேரின் சாட்சியங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் இலங்கை இராணுவம் நிராகரித்துள்ள போதிலும் அது பெரிதாக எடுபடவில்லை.

பாலச்சந்திரனின் ஒளிப்படங்கள் உலகெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையும் சர்வதேச ஊடகங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

கூகுளில் இலங்கை பற்றிய செய்தியைத் தேடினால் இலங்கை பற்றிய எதிர்மறையான செய்திகள்தான் குவிந்துள்ளதைக் காணலாம். அந்தளவுக்கு இலங்கை அரசின் நிலை சர்வதேச அளவில் பாதகமான கட்டத்தில் இருப்பதை உணர முடிகிறது.

அதுமட்டுமன்றி, ஜெனீவா தீர்மான விடயத்தில் இலங்கைக்கு நெருக்கடிகள் இருக்கிறதோ இல்லையோ, இந்தியாவுக்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன என்பதை மட்டும் மறுக்க முடியாது. இலங்கைக்கு எதிராக, அமெரிக்கா தீர்மானம் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ள நிலையில் இந்திய மத்திய அரசு மீதான அழுத்தங்கள் இன்னும் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளன. அதிலும் பாலச்சந்திரனின் ஒளிப்படம் வெளியான பின்னர் இந்திய மத்திய அரசு இக்கட்டான நிலைக்கு சிக்கிவிட்டது என்றே சொல்லலாம். ஏனென்றால், எந்த வகையிலும் இலங்கைக்கு ஆதரவான நகர்வை மேற்கொள்ள முடியாத கட்டத்துக்குள் இந்தியா இப்போது தள்ளப்பட்டு நிற்கிறது.

ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வரப்போகும் தீர்மானத்தை இந்தியாவே கொண்டு வரவேண்டும், இலங்கைக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்ற அழுத்தம், மத்திய அரசு மீது கூட்டணிக் கட்சிகளாலும் எதிர்க் கட்சிகளாலும் கொடுக்கப்படுவதைக் காண முடிகிறது.

சிக்கியுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசு தமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக இந்தியா குற்றம்சாட்டி வருகின்ற நிலையில், உள்ளக நெருக்கடிகளும் அதிகரித்துள்ளதால் ஜெனீவாக் களத்தில் இந்தியாவின் ஆதரவை இலங்கை பெற்றுக்கொள்ள முடியாது என்ற நிலை ஏற்கனவே உருவாகிவிட்டது.

இவற்றையும் மீறி இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்குமானால், அல்லது இலங்கையைக் காப்பாற்ற முனைந்தால்- அது ஓர் அதிசயமாகவே பார்க்கப்படும்.

இலங்கை அரசு இந்தியாவின் காலைப் பிடித்து அதனுடன் பேச்சு நடத்தி ஓர் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் திட்டத்துடன் இருந்தாலும் இந்திய மத்திய அரசுக்குள்ள புறச்சூழல் அதற்குச் சாதகமான நிலையில் இல்லை.

இந்திய மத்திய அரசு இலங்கைக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமானால் ஏதேனும் ஒரு வகையிலேனும் சாதகமானநிலை இருக்க வேண்டும். அதாவது, இந்தியா தனது பூகோள நலனை மட்டும் கருதி அத்தகைய ஆதரவை வழங்க வேண்டும் என்றால், ஒன்றில் இலங்கை அதற்குச் சாதகமாக நடந்து கொண்டிருக்க வேண்டும். அல்லது உள்நாட்டு எதிர்ப்புகள்

யுள்ளதும், அந்த உறுதிப்பாட்டை தமக்கு பிரதமர் மன்மோகன் சிங் வழங்கியுள்ளதாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

கடந்த ஆண்டில் இந்தியா, தீர்மானத்தில் இருந்து நழுவிக் கொள்ளுமா என்ற சந்தேகம் கடைசி வரை இருந்தது. காரணம் இப்படியொரு உறுதிப்பாட்டை கடந்த ஆண்டு முன்கூட்டியே இந்தியா வழங்கவில்லை.

இப்போதுகூட இந்திய அரசாங்கம் அதிகாரபூர்வமாக தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாக அறிவிக்காதுவிட்டாலும் அதற்கு சாதகமான சமிக்ஞைகளையே இந்திய அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில், விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

இந்தியா வலியுறுத்தும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இலங்கை அரசாங்கம் கைகழுவிக்கொள்ள முனைந்துள்ளது, இந்தியாவுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை மறுக்க முடியாது. அதை இந்தியா வெளிப்படையாகவே கூறியுள்ளது. இது இந்தியாவுக்கு மட்டுமன்றி அமெரிக்காவுக்கும் கூட ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடந்த விவாதத்தில் பேசிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இந்தியா உறுதியாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

இத்தகைய நிலையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரக்கூடிய எத்தகைய தீர்மானத்தையும் இந்தியா எதிர்க்க முடியாது. எனினும் இந்தியாவின் ஆதரவைப் பெற முடியும் என்ற நம்பிக்கை இலங்கையிடம் கொஞ்சமேனும் இருப்பதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் இலங்கையின் விருப்பத்துக்கேற்ப நடந்து கொள்ள முடியாத இக்


ஆகப்போகின்ற நிலையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியது, அரசாங்கம் செய்த மிகப்பெரிய தவறு. அதுவே எல்லா அழுத்தங்களையும் மையப்படுத்தியுள்ளது என்ற உண்மையை இனிமேலாவது அரசாங்கம் புரிந்து கொள்ளுமா என்பது சந்தேகம் தான்.

இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியதற்கான தண்டனையை இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒருமுறை ஜெனீவாவில் வழங்குமா, இல்லையா என்ற கேள்விக்கு கடந்த புதன்கிழமை விவாதத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குரிஷித் பதிலளிக்கவில்லை. ஆனால், அவரது உரையிலிருந்து இந்தியாவின் மனோநிலை என்ன என்பதை ஓரளவுக்கேனும் புரிந்துகொள்ள முடிகிறது.

இலங்கையை முழுமையாக எதிர்த்து நிற்கும் அளவுக்கு இந்தியாவிடம் துணிச்சலைக் காணவில்லை. இந்தியாவுக்கு இது சோதனையான விடயம்தான்.

ஒரு பக்கத்தில் எட்டி உதைத்தாலும், தனது சகோதர பாசத்தை விட்டுக் கொடுக்காமல் இலங்கையைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்தியாவின் இதயம் துடிக்கவே செய்கிறது. இன்னொரு பக்கத்தில் உள்ளக நெருக்கடியும் இலங்கை அரசின் போக்கும் அவ்வாறு காப்பாற்ற முடியாத கட்டத்துக்குள் இந்தியாவை தள்ளிவிட்டுள்ளன.

உண்மையைச் சொல்லப்போனால்,



## இலங்கையை விட ஜெனிவாவில் இந்தியாவுக்கே நெருக்கடி அதிகம்

இல்லாமலேனும் இருக்க வேண்டும்.

இந்த இரண்டுமே இல்லாத சூழலில் இந்திய மத்திய அரசு இலங்கைக்கு சார்பாக முடிவுகளை எடுப்பதோ, அதன் சார்பில் நடந்து கொள்வதோ அபத்தமான அரசியல் முடிவாகவே கருதப்படும். கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தபோது அது முட்டாள்த்தனமான முடிவு என்று விமர்சித்தவர்கள் இப்போது அந்த நிலைப்பாட்டிலில்லை.

கட்டான நிலைக்குள் இந்தியா சிக்கிப் போயுள்ளது. அந்தச் சூழலை உருவாக்கிக் கொடுத்தது, தமிழ்நாட்டில் எதிர்ப்புகள் மட்டுமல்ல, இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் கூடத்தான். இந்தியாவை மதிக்கத் தவறியதும் அதற்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதும்தான், இலங்கை இந்தளவு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்குக் காரணம்.

இந்திய நாடாளுமன்ற விவாதத்தின்போது ஜெனீவா களத்தில் இலங்கை வெளிப்படையான நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் அதனிடம் எதையும் எதிர்ப்பது என்ற போர்க்குணத்தை காண முடிகிறது. ஆனால், இந்தியாவிடம் அத்தகைய தெரிவு இல்லை. எதைச் செய்வது என்று தெரியாத குழப்பத்தில்தான் இந்தியா சிக்கியுள்ளது. இது ஜெனீவாவில் இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியை விட பெரிதாகவே தோன்றுகிறது.

கே. சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலம்பெற தகுதியற்றோர் திருப்பி அனுப்பப்படுவர்-அவுஸ்

(கொழும்பு)

மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கையில் தடுப்பு நிலையங்கள் பற்றி மிக மோசமான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள நிலையிலும் அடைக்கலம்பெற தகுதியில்லாதவர்களை தொடர்ந்தும் திருப்பியனுப்பும் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரெண்டன் ஓ கொனர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, மே 2009 இல் முடிவடைந்த புலிகளினுடனான மோதலின்போது தடுத்து வைக்கப்பட்டவர்கள் பரவலாக வல் லுறவு செய்யப்பட்டனர். மேலும் அரசியல் காரணங்களால் தூண்டப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்கின்றன என நியூயோர்க்கை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நடைபெறும் சமயத்தில் வெளிவந்த இந்த அறிக்கையில் 2006 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்றதாக கூறப்படும் சட்டரீதியான மற்றும் இரகசியமான தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற 75 வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

திருப்பியனுப்புதல் மிகவும் ஆபத்தானது என்ற அடிப்படையில் அடைக்கலம் மறுக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்கு கட்டாயமாக அனுப்புவதை லண்டன் மேல் நீதிமன்றம் தடுத்துள்ளது.

இலங்கை பற்றியதாகவும் பிந்திய நிலைமையையும் புகலிடம் கோரும் காரணங்களையும் ஒப்பிட்டு மதிப்பிடாமல் அவுஸ்திரேலிய அரசாங்கம் புகலிடம் கோருவோரை திருப்பியனுப்புவதில்லை என ஓ கொனர் கூறினார். (அ-2)

# கவிதா ஆற்றல் போட்டியில் 18 பல்கலை. மாணவர்கள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் கல்விபயிலும் மாணவர்களின்பன்முக ஆளுமைகளை வெளிக்கொணரும் வகையில் உயர்க ல்வி அமைச்சால் கடந்த 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கவிதா ஆற்றல் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 18 பேர் வெற்றி பெற்றுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அறிவித்துள்ளார்.

கொழும்பில் அனைத்து மாணவர்களுக்குமாக பல்வேறு கட்டங்களாக நடத்தப்பட்ட போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 25 பேர் இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்கள். இதற்கான இறுதிப் போட்டியும் விருது வழங்கல் நிகழ்வும் கடந்த 21 ஆம் திகதி கொழும்பு நெலும் பொகுண மஹிந்தா ராஜபக்ஷ கலையரங்கில் நடைபெற்றது. இதன்போது,

முதலாம் இடம்

க.பரணிதரன் (சிறுகதை), நிசாந்தரணி (நடனம்), சிவதர்சிகா (நாட்டுப்புற பாடல்),

இரண்டாம் இடம்

சாரிதா (மெல்லிசை), தில்லிபவீனா (தொலைக்காட்சி அறிவிப்பாளர்), யோகராசா (மெல்லிசை), வித்தியா (கவிதை), கிறிஸ்ரிராஜ் (பாடலுருவாக்கம்),

மூன்றாம் இடம்

சுவீகரன் (குறுந்திரைப்படம்), சுகிர்தினி (கவிதை), ஜெயப்பிரதா (மெல்லிசை), விஜயகுமாரி (நாட்டுப்புறபாடல்), விஜயகுமார் (வானொலி அறிவிப்பாளர்)

சான்றிதழ்

கஜேந்திரன் (ஓவியம்), புஸ்பகாந்தன் (ஓவியம்), சர்மிளா (ஓவியம்), கார்மெல் ஜோசெப் (ஓவியம்), அகிலன் (மிருதங்கம்) ஆகியோருக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முதலாம் இடத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசிலும் கேடயமும் சான்றிதழும் இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு 75 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் சான்றிதழும் மூன்றாம் இடத் தில் வெற்றி பெற்றவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# ஷிராணியின் கணவர் பிணையில் விடுதலை

தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் கணவருமான பிரதீப் காரியவசம் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தலா பத்து மில்லியன் ரூபா பணத்திலும் இரண்டு தனிப்பட்ட பிணையின் அடிப்படையிலுமே அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

த பினான்ஸ் நிறுவனத்துடனான பங்குக் கொடுக்கல்- வாங்கல்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பள்ளிவாசல் மீது தாக்குதல்!

கேகாலை நகரில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தினால் பள்ளிவாசலின் கண்ணாடிகள் கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளதாகவும் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பள்ளிவாசலைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பள்ளிவாசலுக்கு சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் விஜயம் செய்து தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.




★986 - பிரான்சின் மன்னனாக ஐந்தாம் லூயி முடிசூடினான்.

★1807 - அடிமைகளை நாட்டுக்குள் கொண்டு வருவதை தடைசெய்யும் சட்டமூலம் அமெரிக்க காங்கிரசில் கொண்டு வரப்பட்டது.

★1815- கண்டி ஒப்பந்தம் என வழங்கப் படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டது. சிறை பிடிக்கப்பட்ட ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டான்.

★1836- டெக்சாஸ் குடியரசு மெக்சிக்கோவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1855- இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.

★1896- எதியோப்பியா ஆட்வா என்ற இடத்தில் வைத்து இத்தாலியைத் தோற்கடித்தது. ஓர் ஆபிரிக்க நாடொன்றினால் காலனித்துவ நாடொன்றின் படைகள் தோற்கடிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

★1917- புவேர்ட்டோரிக்கன்களுக்கு ஐக்கிய அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டது.

★1919- அனைத்துலக கம்யூனிஸ்டுகள் முதல் தடவையாக மொஸ்கோவில் கூடின.

★1930- மகாத்மாகாந்தி உப்புச்சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்காக அகமதாபாத்திலிருந்து குஜராத் கடலோரத்தில் இருந்த தண்டி நோக்கி 240 மைல் நடை பயணத்தை ஆரம்பித்தார்.

★1935-சியாம் மன்னர் பிரஜாதிபோக் (ஏழாவது ராமா) முடிதுறந்ததையடுத்து அவரது 9 வயது மருமகன் ஆனந்த மஹிதோல் (எட்டாவது ராமா) மன்னரானார்.

★1941- இரண்டாம் உலகப் போர்: முதலாவது ஜேர்மனியப் படைகள் பல்கேரியாவினுள் நுழைந்தன.

★1943- இரண்டாம் உலகப் போர்: பிஸ்மார்க் கடல் சமரின் போது அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலியப் படைகள் ஜப்பானியக் கப்பல்களை தாக்கி மூழ்கடித்தன.

★1946- ஹோ சி மின் வட வியட்நாமின் ஜனாதிபதியானார்.

★1956- மொரோக்கோ பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1958-தி.மு.க. மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.

★1962-பர்மாவில் இராணுவ ஜெனரல் நெவின் (Ne Win) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★1970-ரொடீசியா பிரித்தானியாவிடம் இருந்த பிணைப்பைத் துண்டித்து தன்னைக் குடியரசாக அறிவித்தது.

★1972- நாசாவின் பயனியர் 10 விண்கலம் வெளிக்கோள்களை ஆராய்வதற்காக புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது.

★1991-இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தொலைவில் இருந்து இயக்கிய கார்க்குண்டு ஒன்றின் மூலம் கொலை செய்யப்பட்டார்.

★1990- ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.

★1992-உஸ்பெக்கிஸ்தான், மல்தோவா ஆகியன ஐ.நாவில் இணைந்தன.

★1995- யாஹூ தொடங்கப்பட்டது.

★1998- ஜூப்பிட்டரின் சந்திரனான யூரோப்பாவில் அடர்ந்த பனிக்கட்டியின் கீழ் திரவ நிலையில் கடல் இருப்பதாக கலிலியோ விண்கலம் தகவல் அனுப்பியது.

★2002- ஆப்கானிஸ்தான் மீதான ஐக்கிய அமெரிக்காவின் அனகோண்டா தாக்குதல் ஆரம்பமாகியது.

பிறப்புக்கள்

★1896- ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழறிஞர் (இ.1961)

★1918- ரஞ்சன், திரைப்பட நடிகர் (இ.1983)

★1923- சுந்தரிபாய், நகைச்சுவை நடிகை

★1931-மிக்கைல் கொர்பசோவ், சோவியத் ஒன்றிய முன்னாள் தலைவர்

★1935- குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (இ.2008)

இறப்புக்கள்

★1791-ஜோன் வெஸ்லி, மெதடிஸத்தை அறிமுகம் செய்தவர் (பி.1703)

★1930- டி.எச். லோறன்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி-1885)

★1949-சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை, கவிக்குயில் (பி.1879)

### குன்னக்குடி வைத்தியநாதன்



1935 இல் தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்திலுள்ள குன்னக்குடியில் இராமசாமி சாத்திரி மீனாட்சி அம்மையார் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த வைத்தியநாதன் தனது 12 ஆவது அகவையிலிருந்து இசைக் கச்சேரிகளில் பங்கேற்றார்.

ஆரம்பத்தில் செம்மங்குடி சீனிவாசய்யர், மகாராஜபுரம் சந்தானம், சூலமங்கலம் சகோதரிகள், சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோருடன் இணைந்து பங்கேற்ற குன்னக்குடி பின்னர் தனிக் குழுவை அமைத்து கச்சேரிகள் நடத்தி வந்தார். தனியாகவும் பின்னர் கச்சேரி செய்ய ஆரம்பித்தார்.

1969 ஆம் ஆண்டு வாராஜாவா என்ற திரைப்படத்துக்கு முதன் முதலில் இசையமைத்த வைத்தியநாதன் தெய்வம், கந்தன் கருணை உள்ளிட்ட மொத்தம் 22 திரைப்படங்களுக்கு இசையமைத்தார். திருமலை தென்குமரி (1970) திரைப்படத்திற்கு இசையமைத்தமைக்காக தமிழக அரசின் சிறந்த இசையமைப்பாளர் விருது பெற்றார். இவர் தனது வாழ்நாளில் இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பை நிறுவி இசையால் நோய்களை குணமாக்க முடியுமா என்ற ஆய்விலும் ஈடுபட்டிருந்தார்.

இவரது இசைப்புலமையை பாராட்டி 1989 ஆம் ஆண்டு இசைப் பேரறிஞர் விருதும் இந்திய அரசினால் பத்ம ஸ்ரீ விருதும் தமிழக அரசின் கலைமாமணி விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இசையினால் பலர் உள்ளங்களை நெகிழ்ந்து குடிகொண்ட இவர் 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி தனது 75 ஆவது வயதில் சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் மாரடைப்பால் காலமானார். இசையால் ரசிகர்களை கவர்ந்த இவர் இசையால் இப்போதும் வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிணங்களைக் கண்டு பதறாத காங்கிரஸ் பாலச்சந்திரனைக் கண்டு விழித்தெழாது



கொலைகளையும் சடலங்களையும் சலனமற்றுப் பார்க்க இலங்கைப் போர் நம்மைப் பயிற்றுவித்திருக்கிறது. நாம் நிறைய சடலங்களைப் பார்த்துவிட்டோம்.

தலை நசுங்கிய குழந்தைகள், மார்பகம் சிதைக்கப்பட்ட பெண்கள், குடல் பிதுங்கிய கர்ப்பிணிகள், உடல் சிதறிய போர் வீரர்கள்... இவ்வாறு எண்ணில் அடங்காதவை. ஆனால், இப்போது வெளியாகியிருக்கும் அந்தப் பாலகனின் புகைப்படங்கள் அத்தனை கோரமானது இல்லை.

அறியாமை நிரம்பிய முகத்துடன் பாலச்சந்திரன் பிஸ்கட் சாப்பிடுகிறான். தனக்கு நேரப்போகும் கொடூ




ரத்தை அவன் அறிந்திருக்கவில்லை. அடுத்த புகைப்படத்தில் துப்பாக்கிக் குண்டுகள் அவன் மார்பில் பதிந்திருக்கின்றன. உயிர் இல்லை. அந்த முகத்தில் உறைந்திருக்கும் குழந்தைத் தன்மையே உலகை உலுக்கியிருக்கிறது. இவை அசைக்க முடியாத போர்க்குற்ற ஆவணங்கள் என்கிறார்கள் மனித உரிமை ஆர்வலர்கள்.

கடந்த ஆண்டு கில்லிங் பீல்ட்ஸ் என்ற பெயரில் இலங்கையின் கோர முகத்தை வெளிக்கொண்டு வந்த சனல் 4 தொலைக்காட்சிதான் இந்த ஆண்டு நோ பயர் சோன் என்ற பெயரில் புதிய ஆவணப்படத்தை வெளியிட்டிருக்கிறது.

பாலச்சந்திரன் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்ட புகைப்படங்கள், கேணல் ரமேஷ் அடித்துக் கொல்லப்படும் பதற வைக்கும் காட்சி உள்ளிட்ட பல முக்கியமான ஆதாரங்கள் இதில் உள்ளன.

இந்தப் படங்களின் தயாரிப்பாளர் கெல்லம் மெக்ரே, "இது ஒரு சாட்சியமற்ற போர் என்று கடந்த ஆண்டு குறிப்பிட்டார்" இலங்கை அரசு அப்படித்தான் இதை நடத்தியது. நாங்கள் வெளிக்கொண்டு வந்திருக்கும் இந்த ஆதாரங்கள் இரண்டு இலங்கை இராணுவ வீரர்களால் அவர்களின் கையடக்க தொலைபேசிகள் மூலம் எடுக்கப்பட்டவை.

"இலங்கையை விட்டு வெளியேறி வந்திருக்கும் அவர்களிடம் இருந்து இதைப் பெற்றுத்தான் இந்த ஆவணப் படம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

இலங்கை யுத்தம் நடைபெற்ற போது நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்போது அமைதி காத்த மேற்கத் தேய நாடுகளும் அவர்களின் ஊடகங்களும் இப்போது பதறுகின்றன.

தூக்கத்தில் இருந்து விழித்து எழுந்ததைப்போல, 'இலங்கை ஒரு போர்க்குற்றம் புரிந்த நாடு' என்கிறார்கள். பலநாடுகள் இலங்கை மீது சர்வதேச விசாரணையைக் கோருகின்றன.

ஏதேனும் ஒரு வகையில் நீதியையும் தீர்வையும் தேடும் தமிழர் ஆதரவு அரசியல் சக்திகள், இந்த உலகளாவிய ஆதரவை இலங்கைக்கு எதிராகத் திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

ஆனால், இலங்கை அரசோ, அனைத்தும் பொய் என்று போகிற போக்கில் நிராகரிக்கிறது. சர்வதேச சமூகத்தின் கோபமும் எதிர்ப்பும் இலங்கையைத் துரும்பு அளவுக்குக் கூடச் சலனப்படுத்தவில்லை.

**நடைமுறையில் சீனாவின் செல்வாக்கு இலங்கைத் தீவில் எல்லை கடந்து விடக் கூடாது என்பதற்காகவே இலங்கையைச் செல்லமாகக் குட்டி வைக்க அமெரிக்கா நினைக்கிறது தண்டிப்பதற்கு அல்ல!**

ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கூட்டம் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 25 ஆம் திகதிவரை இக்கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் இலங்கையின் போர்க்குற்றம் குறித்த விவாதங்கள் விரிவாக நடைபெறவிருக்கின்றன. இதில் பங்கேற்பதற்காக இலங்கை, தமிழகம் மற்றும் உலகெங்கிலும் இருந்து பல தமிழ் அரசியல் குழுக்கள் ஜெனீவாவுக்குச் சென்றுள்ளன. இந்தக் கூட்டத்தின் இறுதி முடிவு இலங்கைக்கு ஓர் அரசியல் நெருக்கடியை உருவாக்கும் என்பது பலரது எதிர்பார்ப்பு. ஆனால், யதார்த்தம் என்ன?

கடந்த ஆண்டு நடைபெற்ற இதே ஜெனீவா மனித உரிமைக் கூட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா கண்டிப்பு காட்டியது. அதைப் பெரிய வெற்றியாக எல்லோரும் பேசினார்கள். நல்லிணக்க ஆணைக்குழு என்பது வேறு ஒன்றும் இல்லை... இலங்கை அரசே ஒரு குழு அமைத்து தன்னைத்தானே விசாரித்துக் கொண்டது. அப்படி விசாரித்து தமிழர்களுக்குச் சில சீர்திருத்தத் திட்டங்களை அமுல்படுத்த அந்தக்குழு பரிந்துரைத்தது. அதை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் தீர்ப்பு.

இந்த ஒரு வருடத்தில் அந்தக் கண்துடைப்பு பரிந்துரைகளைக்கூட இலங்கை அரசு அமுல்படுத்தவில்லை. இந்த நிலையில்தான் மறுபடியும் ஐ.நா.கூட்டம் நடக்கிறது. இப்போது என்ன நடக்கும்?

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த [illegible] ஓர் ஆண்டு அவகாசம் [illegible] நிச்சயம் அதற்கு அனுமதி அளிக்கப்படும். அதைத் தாண்டி சனல் 4இன் ஆதாரங்களால் சில சர்ச்சைகள் உருவாகலாம். இதற்காக பெயரளவுக்கு இலங்கையை மேற்கத்தேய நாடுகள் கண்டிக்கும். அதைப் பெரிய வெற்றியாக நாம் கொண்டாடலாம்.

ஆனால், அதனால் இலங்கைக்குச் சிறு ஆபத்தும் நேராது. ஏனெனில், இலங்கையை இந்தியா மட்டும் பாதுகாக்கவில்லை. சீனா, அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் இலங்கையை அரண்போலக் காக்கின்றன.! என்பது சர்வதேச அரசியல் பார்வையாளர்களின் கருத்து.

இந்தப் பட்டியலில் அமெரிக்காவைச் சேர்ப்பது பலருக்கு வியப்பை அளிக்கலாம். இலங்கை மீது விசாரணை வேண்டும், நடவடிக்கை வேண்டும் என்ற அமெரிக்காவின் சமீபகாலப் போக்குகளை வைத்துப் பார்க்கும் போது இது முரணாகத் தோன்றலாம்.

ஆனால், நடைமுறையில் சீனாவின் செல்வாக்கு இலங்கைத் தீவில் எல்லை கடந்து விடக் கூடாது என்பதற்காகவே இலங்கையைச் செல்லமாகக் குட்டி வைக்க அமெரிக்கா நினைக்கிறது தண்டிப்பதற்கு அல்ல!

இதற்கு உதாரணம் ஒன்றும் சொல்ல முடியும்... 2009 இறுதி யுத்தத்தில் பங்கெடுத்த இலங்கை இராணுவ ஜெனரல்களில் ஒருவர் சவேந்திர சில்வா, போர்க்குற்றத்தில் ஈடுபட்டமைக்காக இவர் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இவர் இப்போது என்ன செய்கிறார் தெரியுமா? அதே அமெரிக்க இராணுவத்திற்கு பயங்கரவாதத்தை எப்படி வெற்றிகரமாக முறியடிப்பது என்று பயிற்சி அளித்து வருகிறார். இதுதான் இலங்கையைத் தண்டிக்கக்கோரும் அமெரிக்காவின் நிஜமுகம்! இன்னொரு புறம் இத்தகைய ஆதாரங்களை முன்வைத்து இந்திய அரசை மனம் இரங்க வைத்து விடலாம் என்று சிலர் எண்ணுகின்றனர்.

பல்லாயிரக்கணக்கான பிணங்களைக் கண்டு பதறாத காங்கிரஸ் அரசின் கூட்டு மனச்சாட்சி, பாலச்சந்திரனின் ஒரே சடலத்தில் விழித்தெழும் என நம்புவது அரசியல் அறியாமை.

எந்த இந்திய அரசு தமிழீழப் போராட்டத்தைச் சிதைத்ததோ, எந்த காங்கிரஸ் அரசு தமிழீழப் போராட்டத்தை முடித்து வைத்ததோ, எந்த இந்திய அரசு விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டியதோ... அதே இந்திய அரசிடம் நியாயம் கேட்பது அவலத்திலும் அவலம்.

இந்த விவகாரம் தொடர்பாக இன்னொரு கோணத்தையும் நாம் மனதில்கொள்ள வேண்டும்.

சனல் 4 ஈழப்போர் தொடர்பான ஆதாரங்களைப் படிப்படியாக வெளியிடும் பரபரப்பு உத்தி மிகவும் ஆபத்தானது. பாலச்சந்திரன் குண்டு துளைக்கப்பட்டு சடலமாக விழுந்து கிடக்கும் [illegible] கடந்த ஆண்டு வெளியா[illegible] வெளியிட்ட சனல் 4 தான்



இப்போது பாலச்சந்திரன் உயி ரோடு இருக்கும் புகைப்படத்தையும் வெளியிட்டிருக்கிறது. இந்தப் புகைப்படங்கள் ஒரே கமராவால் அடுத்தடுத்து எடுக்கப்பட்டவை உண்மையானவை என்று சொல்கிறார் கேலம் மெக்ரே.

எனில் நிச்சயம் கடந்த வருடமே பாலச்சந்திரன் உயிருடன் உள்ள புகைப்படமும் அவர்களிடம் இருந்திருக்கிறது. அடுத்த ஆண்டு பாலச்சந்திரன் கொல்லப்பட்ட வீடியோகூட வரலாம். இதை மெக்ரேவும் ஒப்புக் கொள்கிறார். எங்களிடம் மேலும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. பொருத்தமான நேரத்தில் வெளியிடுவோம் என்றார். பொருத்தமான நேரம் என அவர் சொல்வதன் பொருள் என்ன? அடுத்த ஆண்டு ஜெனீவா கூட்டமா?



லண்டன் அரசு கடந்த 2012 ஆம் ஆண்டில் மட்டும் 3.8 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை இலங்கை இராணுவத்துக்கு வியாபாரம் செய்திருக்கிறது. ஒருபக்கம் இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்துக்கொண்டே இன்னொரு பக்கம் ஆயுத வியாபாரம் செய்யும் லண்டன் அரசாங்கத்தின் மீது சனல் 4 இன் ஆவணப்படம் சிறு விமர்சனத்தையும் வைக்கவில்லை.

தமிழர் அமைப்புகளும் இதைப் பற்றி எதுவும் கேட்காமல் யாரோ ஒருவர் செய்தால் சரிதான் என்று ஒதுங்கிப் போகிறார்கள். ஆனால் நிதர்சன யதார்த்தங்களை உணர்ந்து கொண்டு நமக்கான நீதியை யாரேனும் பெற்றுத்தருவார்கள் என நம்பியிருக்காமல் இலங்கையில் ஒடுக்கப்படும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடவேண்டும்.

அதுதான் தீர்வுக்கான வழி. மற்றப்படி மனச்சாட்சியை தட்டி யெழுப்பி நியாயம் பெறுவதற்கு இலங்கையையும் இந்தியாவையும் நியாயவான்கள் ஆட்சி செய்யவில்லை.

ஆனந்தவிகடன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# நிகழ்வின் நிழல்கள்




யாழ்.வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்குரிய பட்டமளிப்பு விழா அண்மையில் மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் மாணவி ஒருவருக்கு பட்டச் சான்றிதழினை வழங்கி வைப்பதையும் நிகழ்வில் பட்டம் பெற்றவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)





யாழ்.இளையதம்பி இந்து தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜா வெற்றியீட்டிய மாணவருக்கு கேடயம் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் கே.கதிரவேல்பிள்ளை நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)





யாழரசு எழுதிய மௌன மொழிகள் எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நூலின் முதற்பிரதியை பிரதேச செயலாளர் வழங்கி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)









மகாஜனக் கல்லூரிக்கும் சிகிரியா சிம்பெனித் யூனியன் பாடசாலைக்கும் இடையில் சிநேகிதபூர்வ காற்பந்தாட்டப் போட்டியொன்று கடந்த 24 ஆம் திகதி காலை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் 3 பிரிவு அணிகள் பங்குபற்றின. 15 வயது பெண்களுக்கிடையிலான போட்டியில் மகாஜனக்கல்லூரி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. இவ் அணியைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடிய பணம் சேமிக்கும் இடமாக பாராளுமன்றம் விளங்குகிறது

## முன்னாள் ஜனாதிபதி கர்ஜிப்பு



வெள்ளை வான்களில் ஆட்களை கடத்து பவர்கள் மற்றும் மனிதர்களை மரத்தில் கட்டி வைத்து தண்டிப்பவர்களால் நாட்டில் நல்லாட்சியை நடத்த முடியாது. ஒவ்வொரு கட்சியிலும் இருக்கின்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

விஜய குமாரதுங்கவின் 25 ஆவது ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற' கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை ஆட்சி செய்யும்' அனைவரும் இன்று நாட்டில் நல்லாட்சி ஒன்றை நடத்துவதற்கு முயற்சிப்பது இல்லை. வெள்ளை வான்களில் ஆட்களை கடத்துபவர்கள் மற்றும் மனிதர்களை மரத்தில் கட்டி வைத்து தண்டிப்பவர்களால் நாட்டில் நல்லாட்சியை நடத்த முடியாது.

ஹொரகொல்லையில் எங்களுக்கு 4 ஆயிரம் ஏக்கர் காணிகள் அங்கு இருந்தன. 1956 ஆம் ஆண்டு எனது தந்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்து பாதுகாப்பதற்காக 500 ஏக்கர் காணியை விற்றார். பின்னர் எனது தாயும் எங்களை வளர்ப்பதற்கு காணிகளை விற்றார்.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது எனது இரு பிள்ளைகளுக்கும் ஒரேயொரு வாகனம் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. ஒருவர் பயணம் சென்றால் அவர் வரும்வரை மற்றவர் காத்திருக்க வேண்டும். இல்லை என்றால் இருவரும் சேர்ந்து போக வேண்டும்.

ஆனால், இன்று ஒருவருக்கு 11 வாகனங்கள். மற்றவருக்கு 12 வாகனங்கள். இன்னுமொருவருக்கு 15 வாகனங்கள் இருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்களில் படித்தவர்கள் கைவிரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் கூட இல்லை. ஆகக் கூடிய பணத்தை சேர்த்துக் கொள்ளக் கூடிய துறையாக இன்று நாடாளுமன்ற அங்கத்துவம் காணப்படுகிறது.

விஜய குமாரதுங்க சிறைக்குச் செல்லும் போது எனது மகனுக்கு மூன்று மாதங்கள். அப்போது பால்மா வாங்கக்கூட ஐந்து சதம் இருக்கவில்லை.

அந்நேரம் மேர்வின் சில்வாவின் குடும்பமும் எங்கள் வீட்டில் தஞ்சம் புகுந்திருந்தன. மேர்வின் சில்வாவும் சிறையில் இருந்தார். இவர்கள் அனைவருக்கும் உணவளிப்பதற்காக ஐந்து சதம் கூட யாரிடமும் கேட்கவில்லை. எங்கள் காணியில் இருந்த மரங்களை விற்று அவர்களை நான் காப்பாற்றினேன்.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது எனக்கு சொந்தம் இல்லாத ஐந்து சதத்தைக் கூட நான் எடுத்தது இல்லை. அதேபோன்று எனது அரசாங்க அங்கத்தவர்களையும் இயன்றளவு அதிலிருந்து தடுத்தேன். ஆனால் இன்றைய நிலைமை மாறிவிட்டது.

நாட்டின் ஆட்சியை பற்றி மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. பெருமளவு கற்பழிப்பு செய்பவர்கள் அரசு தரப்பு கிராமிய மட்ட உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவைகளை தடுப்பதற்கு கூட அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டினார். (அ-2)

---

***Dextromethorphan* அடங்கிய**

## இருமல் பாணி பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

Dextromethorphan அடங்கிய இருமலுக்கு பயன்படுத்தப்படும் பாணி வகை மருந்தினை உட்கொள்வதால் உயிராபத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் இப் பாணிவகை மருந்தினை பயன்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் சுகாதார அமைச்சினால் தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி Actifed DM, Ascodex, Aterbury S, Broncodex, Chlofen DM, Cosome, Cosyr, Dexal, Dricof D, Glycodin, Hydrylin DM, Koftex D, Lastuss LA, Libitus Expectorant, New Tuxiril, Ofkof, Piriton DM, Recindal, Rebitussin DM, Sanadd DMP, Sedilix DM, Sirares, Tusq DX, VT-3, Waterbarys Compound, Woods' Peppermint antituss veplus antililsiamine போன்ற Dextromethorphan கொண்ட தற்போதைய பாவனையில் உள்ள பாணி வகை மருந்துகளிற்கே மேற்படி சுகாதார அமைச்சினால் தற்காலிகமாக தடைவிதிக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பிரகாரம் குறித்த பாணிவகை மருந்தினை மருந்தகங்களில் விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறும் இவ் அறிவித்தலை மீறி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பொதுமக்கள் இதனை வாங்குவதையோ வாங்கி உபயோகிப்பதையோ உடனடியாக நிறுத்தி உயிராபத்து ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-5)

---

## திரை அரங்குகளுக்கு சிறார்களை அழைத்துச் செல்வோர் தண்டிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியரை திரையரங்குகளுக்கு திரைப்படம் பார்க்க கூட்டிச் செல்வது சட்டவிரோத குற்றமாகும்.

அவ்வாறு சிறுவர், சிறுமியரை திரையரங்கிற்கு கூட்டிச் செல்வோர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு அத்தியட்சகர் இ.எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்தின் சில பிரதேசங்களில் சிறுவர், சிறுமியர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உடல் ரீதியாக துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றமை அதிகரித்து வருகின்றது.

இவற்றில் பெரும்பாலான சிறுமிகள் ஏமாற்றப்பட்டே இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

ஆகையினால் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளை சினிமாப்படம் பார்க்க திரையரங்குகளுக்கு அழைத்துச் செல்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறான பாலியல் ரீதியாக துன்புறுத்தல்களினை கட்டுப்படுத்துவதற்காக இரவு, பகல் வேளைகளில் பொலிஸாரின் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ள .

பாலியல் துஷ்பிரயோகங்கள், உடல் ரீதியான துன்புறுத்தல்கள் ஏதேனும் நடைபெற்றால் அதனை தாமதிக்காது பொலிஸாரிற்கு தெரியப்படுத்துங்கள் எனவும் அவர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டார். (அ-4)

---

## விபத்தில் படுகாயமடைவோரை பொதுமக்கள் பயமின்றி மருத்துவமனையில் சேர்க்கலாம்

(யாழ்ப்பாணம்)

விபத்துக்களில் படுகாயமடைவோரினை பொதுமக்கள் எவ்வித பயமுமின்றி வைத்தியசாலைகளில் அனுமதிக்க முடியும் என கே.கே.எஸ் பொலிஸ் பிரிவு அத்தியட்சகர் இ.எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

விபத்துக்களில் படுகாயமடைவோரினை பொலிஸாரின் உதவியின்றி வைத்தியசாலைகளில் அனுமதிப்பதனால் சட்டச்சிக்கலினை எதிர்நோக்க வேண்டியிருக்குமோ என பயந்து விபத்துக்களில் காயமடைவோரினை வைத்தியசாலையில் அனுமதிக்க பொதுமக்கள் முன்வருகின்றனரில்லை. இதனால் பல உயிர்கள் அநியாயமாக காவு கொள்ளப்படுகின்றன என அத்தியட்சகரிடம் ஊடகவியலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு அவர் பதிலளித்தபோது,

யாழ்.மாவட்டத்தில் தற்போது விபத்துக்கள் நடைபெறுகின்றதை உணரவும் அறியவும் முடிகின்றது.

இதற்கு நாம் கிராமங்கள் ரீதியாக பல வேலைத்திட்டங்களினை முன்னெடுத்து பொதுமக்களுக்கு திரைப்படக் காட்சிகள் மூலம் விளக்கமளிக்கவுள்ளோம்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்து தொடர்பில் தப்பான அறிவு காணப்படுகின்றது.

அதாவது விபத்துக்களில் படுகாயமடைவோரை வைத்தியசாலையில் அனுமதித்தால் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்படுவர். இது தவறானது ஆகும். இவ்வாறு படுகாயமடைந்தோரினை வைத்தியசாலையில் அனுமதிப்போர் மீது விசாரணையோ பொலிஸாரின் கெடுபிடியோ இடம்பெறாது.

சாட்சியம் மட்டுமே பதிவு செய்யப்பட்டு அவர் சில மணி நேரங்களிலோ சில நிமிடங்களிலோ வீடு செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஓர் உயிரினை காப்பாற்றும் உயர்ந்த சந்தர்ப்பம் கிடைத்தது என இனிமேலாவது மனிதத்தன்மையுடன் நடக்க முயற்சி செய்யுங்கள் என அறிவுறுத்தினார் அவர். (அ-4)

---

## சந்தைப் பகுதியில் போக்குவரத்து சீர்கேடு; நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தை கூடும் நேரத்தில் இடம்பெறும் போக்குவரத்து சீர்கேடுகள், சிறு சிறு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என காங்கேசன் துறை பொலிஸ் பிரிவு சிரேஷ்ட அத்தியட்சகர் இ.எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

திருநெல்வேலி சந்தைப்பகுதியில் சந்தை கூடும் நேரமான அதிகாலை 5 மணி முதல் முற்பகல் 10 மணிவரை போக்குவரத்து சீர்கேடு காணப்படுவதாகவும் சந்தைப் பகுதியில் சிறுசிறு அடிதடிச் சம்பவங்கள் நிகழ்வதாகவும் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாரும் நல்லூர் பிரதேச சபையினரும் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என ஊடகவியலாளர் ஒருவரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு பதிலளித்த அத்தியட்சகர் எதிர்வரும் நாட்களில் அங்கு போக்குவரத்து பொலிஸார் மேலதிகமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்படும் எனவும் அடிதடிச் சம்பவங்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

அத்துடன் திருநெல்வேலி சந்தை பொலிஸாரின் முழுக்கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படும் எனவும் கூறினார். (அ-4)

---

## வெற்றிலைக்கேணி நுகர்ச்சி கிளை எதிர்வரும் 15 ஆம் திகதி திறக்கப்படும்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் வெற்றிலைக்கேணிக்கான நுகர்ச்சிக்கிளை எதிர்வரும் 15 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இடம்பெற்ற வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இந்த கிராம மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளால் வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர்களுக்கு இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் சமாசத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோதமான தொழில்களை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கிராமத்தின் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களிற்கும் அதன் தாய் நிறுவனமாகிய சமாசத்திற்கும் பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனை பயன்படுத்தி வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் கடற்பரப்பில் கணவாய் தொழிலை மேற்கொள்வதற்காக போடப்படும் பற்றைகள் யாரால் போடப்பட்டது என இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏனைய தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் அவர்களின் தொழில் உபகரணங்களை பாதுகாக்கவும் சங்கங்கள், சமாசத்தினர் முன்வர வேண்டுமென தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (அ-3-64)

---

## சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சுயமாற்ற செயற்றிட்டம்

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் **ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுங்கள்** என்ற சுயமாற்றச் செயற்றிட்டம் இவ்வருட மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் அமுல்படுத்தப்படுகிறது.

ஒருவர் தன் வாழ்க்கையில் தனக்கு விரும்பமில்லாத ஏதேனும் ஒன்றிலிருந்து விடுபட்டு தான் அடையத் துடிக்கும் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக விடுக்கப்படும் ஒரு அறைகூவலே **ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுங்கள்** என்ற செயற்றிட்டமாகும்.

அந்த வகையில் ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுங்கள் திட்டத்தின் துண்டுப் பிரசுரத்தோடு இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து **ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறும்** நிகழ்வில் அதனைச் சமர்ப்பிப்பவர்கள் தங்களைப் பலப்படுத்தும் அன்பளிப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிகழ்வு மகாசிவராத்திரி தினமான எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை இல.211, பிரவுண் வீதியில் கலட்டிச் சந்திக்கு அருகே அமைந்துள்ள யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் தலைமை ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவில் வற்றாப் பளை-முள்ளியவளையில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்திலும் மன்னாரில் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்திலும் குறித்த நிகழ்வு அன்றைய தினம் மாலை 4 மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை இடம்பெறவுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறும் படிவத்தை மகா சிவராத்திரி தினத்தன்று அர்ப்பணிக்க விரும்புவர்கள் மாலை 4 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இடையில் எந்நேரத்திலும் அதனைச் சமர்ப்பித்துத் தமக்கென ஒரு விசேட இயல்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இந்நிகழ்வில் இரண்டு மணித்தியால கலை நிகழ்ச்சிகளும் புத்தகங்கள் மற்றும் இறுவெட்டுக்களின் விற்பனையும் சுய மாற்ற இரகசியம் பற்றிய படவிளக்கமும் வீடியோப் படக்காட்சியும் பங்குபற்றுவோர் நலன் கருதி இடம்பெறவுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காற்றில் பறந்தோடும் காய்ந்த சருகு போல நீ வீண் கர்வம் இல்லாதிரு.

–ஸ்ரீஇராமகிருஷ்ணர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குடை, ஆலவட்டம் பிடிக்கும் பண்பாடு கைவிடப்பட்டது சரியானதா?

பூனை இல்லாத வீட்டில் எலிகள் சன்னதம் என்றொரு பழமொழி தமிழில் உண்டு.

இந்தப் பழமொழியின் பிரதிபலிப்பை வட மாகாணத்தில் பல இடங்களில் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது பட்டமளிப்பு விழா மண்டபத்துக்கு பல்கலைக்கழகத்தினர், துணை வேந்தர், பீடாதிபதிகள் உள்ளிட்டோர் குடை, ஆலவட்டம், மங்கள வாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்படுவது வழக்கம்.

ஆனால் நேற்று முன்தினம் 28–ம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28–வது பட்டமளிப்பு விழாவின் போது குடை, ஆலவட்டம் பிடிப்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மறுத்துவிட்டதாகவும் இதனால் காலாகாலமாக நடந்துவந்த குடை, ஆலவட்டம் பிடிக்கும் பண்பாடு இல்லாமல் போனதாகவும் தெரியவருகிறது.

குடை, ஆலவட்டம் பிடிப்பதுதான் ஆண்டான் அடிமை என்று ஊழியர் சங்கம் தெரிவித்திருப்பது வேதனைக்குரியது.

குடை, ஆலவட்டம் பிடிப்பதென்பது கல்விக்கு கொடுக்கின்ற மரியாதையே அன்றி தனிப்பட்ட மனிதர்களுக்கானது அல்ல.

கல்வியை மிக உயரிய செல்வமாக மதிப்பதன் அடிப்படையில் குடை, ஆலவட்டம் சகிதம் மங்கள வாத்தியம் இசைக்க பட்டமளிப்பு நிகழ்வு நடத்தப்படுகின்றது.

இதில் ஆண்டான் அடிமை முறை எங்குள்ளதென்பது விளங்கா பொருளாகவே உள்ளது.

உலகில் எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு தனிமனிதமே அடிப்படை.

திருச்சபையை எடுத்துக் கொண்டால் அங்கு பாப்பரசர் தனிமனிதனாக நின்றாலும் உலக கத்தோலிக்கத் திருச்சபையின் பிரதிநிதியாக – தலைவராக கௌரவிக்கப்படுகின்றார்.

இதேபோல பிரித்தானியப் பிரதமர் இலங்கைக்கு வருகின்றார் எனில் அவருக்கு செங் கம்பள வரவேற்பு வழங்குவது பிரித்தானிய தேசத்திற்கு கொடுக்கப்படுகின்ற மரியாதையாகும்.

செங்கம்பளத்தை விரிக்கின்றவன் நான் ஏன் செங்கம்பளம் விரிக்க வேண்டும் என்று கேட்பானாக இருந்தால் – பிரித்தானியாவுக்கு இப்போதும் நாங்கள் அடிமைகளா என்று வினாவுவானாக இருந்தால் நிலைமை என்ன வாகும்?

ஜனாதிபதி மாளிகையின் இரு அருகிலும் இருவர் ஆடாமல் அசையாமல் நிற்கிறார்களே அதுவும் அடிமைமுறை என்றா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கருதுகிறது?

கேட்பதுக்கு ஆள் இல்லை என்ற நிலையில் தட்டிக்கேட்டு சில விடயங்களை அமுலாக்கலாம். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டெழுந்து இத்தகைய ஊழியர்கள் எங்களுக்கு வேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் நடத்தினால் நிலைமை என்னவாகும்?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒருசில ஊழியர்கள் எடுத்த முடிபு தமிழ் மக்களின் ஒரு பெரு நிகழ்வாக இருக்கும் பட்டமளிப்பு விழா வின் மகோன்மத்தை குறைக்குமாக இருந்தால் அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பது அழகல்ல.

ஊழியர் சங்கங்கள் தங்கள் உரிமைக்காக பாடுபட வேண்டும் என்பது நியாயமானது. அதற்காக எல்லாவற்றிலும் கைவைக்கலாம். அதனை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பது அறிவுபூர்வமானது அல்ல என்பது உணரப்பட வேண்டும்.

## முள்ளியவளை மேற்கு

# பொன்நகர் கிராமத்தின் அவலத்தை தீர்ப்பார் யாரோ?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பொன்நகர் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அல்லலுறுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் கணவனால் கைவிடப்பட்டவர்கள் , விதவைகள் மாற்று வலுவுடையவர்களே அதிகம் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்கள் மீள்குடியேறி 3 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை. இந்தியன் வீட்டுத்திட்டத்தில் 50 வீடுகள் மட்டும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. அவ் வீடுகள் அனைத்தும் அளவில் சிறியளவாக அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மின்சார வசதி இன்மையால் மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் எவ்வித வேலைகளும் முன்னெடுக்கப்படாத நிலை உள்ளது.

எல்லா விதத்திலும் பாதிக்கப்பட்டு மிகவும் பின் தங்கிய நிலையில் வாழும் இம் மக்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கூட முழுமையாக வழங்கப்படவில்லை. அத்துடன் பயனாளிகள் தெரிவிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். வைத்திய சாலை வசதி இன்மையிலும் இக்கிராமத்திற் கான போக்குவரத்து வசதியின்மையாலும் இப்பகுதி மக்கள் 700 ரூபாய் பணம் கொடுத்து முச்சக்கர வண்டியில் மாவட்ட வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இக்கிராமத்திற்கு செல்ல வேண்டிய பிரதான 4 1/2 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. மேலும் இங்கு காணப்படும் 7 சிறிய வீதிகளும் புனரமைக்கப்படவில்லை. 55 அடி ஆழத்தில் தண்ணீர் உள்ள கிணறு இரண்டு இக்கிராமத்தில் உள்ளது. ஒவ்வொரு வீட்டுக்கும்கிணறுகள் அமைத்துக்கொடுக்கப்படவேண்டியது அவசிய மாகும். மாலை நேரக் கல்வி வகுப்பு வசதி இக்கிராமத்திற்குஇன்மையால் மாணவிகளின் கல்விச்செயற்பாடுபின்னடைவில்உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு நிர்க்கதியாக்கப்பட்ட தமக்கு உதவ வேண்டுமென வேண்டுகோள்விடுத்துள்ளனர். (அ–3,267)

## இலங்கைக்கும் ஈராக்கிற்கும் இடையில் நேரடி விமான சேவை

இலங்கைக்கும் ஈராக்கிற்கும் இடையில் நேரடி விமானசேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பில் இரு நாடுகளும் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிற்கு தேயிலை ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட பல்வேறு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

தேயிலை ஏற்றுமதி மற்றும் நேரடி விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இரு நாட்டு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் அண்மையில் ஈராக்கிற்கு விஜயம் செய்து அந்நாட்டு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கீரல்லால் ஹசனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையிடமிருந்து தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளின் வரிசையில் ஈராக் ஐந்தாம் இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ–2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



முக்தி அடைந்தால் நீங்கள் துயரத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள் என்று கூறுவதன் பொருள் என்னவெனில் உங்களுடைய தனிப்பட்ட துயரத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள் என்று அர்த்தம்.

ஏன் புத்தர் துயரப்பட்டார், இயேசு கிறிஸ்து துயரப்பட்டார், அனைவருமே துயரப்படுகின்றனர். நீங்களும் துயரப்படுவீர்கள். ஆனால் இனிமேல் அது உங்களுடைய துயரமாக இருக்காது. அது மனித இனத்தின் துயரம். இது உங்கள் இதயத்தைத் தொடும். உங்களால் அமைதியாகவே இருக்கமுடியாது. அது உங்களைப் பாதிக்கும்.

புத்தருக்கும் இயேசுவுக்கும் நிகழ்ந்த துக்கம் மனித இனத்தின் மேல் அவர்களுக்கு இருந்த கருணையும் பரிதாபமுமேயாகும். மற்றவர்கள் துயரப்பட்டபோது அவர்கள் துயரப்பட்டனரே தவிர தங்களை நினைத்து துக்கப்படவில்லை. இப்போது நீங்கள் உள்ள சூழ்நிலையில் வேறு யாரேனும் துயரத்தில் இருந்தால் அதை உங்களால் உணரமுடிவதில்லை. அப்படி உணர்ந்தாலும் உங்களைப் பற்றிய ஒரு பாதுகாப்பு உணர்வில் உள்ளீர்கள்.

நீங்கள் ஜீவன் முக்தி பெற்றுவிட்டால் நீங்கள் யோசித்து செயற்படமாட்டீர்கள். இதயத்திலிருந்து செயற்படுவீர்கள். அவ்வளவுதான். அதன் விளைவு எவ்வாறு இருக்கும் என்று யாராலும் கூற இயலாது. ஒவ்வொரு நாளும் அது மாறுபடலாம். ஆனால் உங்களுக்கென நீங்கள் துயரப்படமாட்டீர்கள். மனித இனத்தின் துயரம் உங்களுடைய துயரமாகி விடும். உங்களுடைய தனிப்பட்ட துயரமாக இனி அது இருக்காது.

## தொழில்நுட்பக்கல்லூரியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

(பூந்தோட்டம்)

வவுனியா தொழில் நுட்பக்கல்லூரியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரியின் அதிபர் வைத்திலிங்கம் சத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றுபவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் அடிப்படை சிங்கள மொழி பயிற்சி வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் இடம் பெற உள்ளதால் தொழில்நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை வெளிநாட்டு வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள குழாய் பொருத்துனர் பயிற்சி வகுப்புக்களுக்கு புதிதாக இணைய விரும்பும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் காணப்படுவதனால் தொழில் நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளார். (அ–2,266)

## ஸ்கந்தஹோமம்

நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோவிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் ஸ்கந்த ஹோ மம் இடம்பெறவுள்ளது.

நீர்வை மணி என அழைக்கப்படும் கு.தியாகராஜக் குருக்களின் பீமரத சாந்தி வைபவத்தையொட்டியே மேற்படி ஹோமம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ–2)

## சமய அறிவுப்போட்டி

சிவராத்திரியையொட்டி உரும்பிராய் கிழக்கு அருள்மிகு கண்ணகா பரமேஸ்வரி ஆலய நிர்வாக சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமய அறிவுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் போட்டி இணைப்பாளர் ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தரம் ஒன்று முதல் தரம் 13 வரையான மாணவர்கள் பங்குகொள்ளும் இப் [illegible] பன இடம் பெறவுள்ளது. (அ–5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தைரியமாக இருங்கள்



✦ மனிதன் வாழ்வில் எந்த அளவுக்கு உயர்கிறானோ அந்த அளவுக்குக் கடுமையான சோதனைகளைக் கடந்தாக வேண்டும்.

✦ தோல்வியைத் தழுவி உயிர்வாழ்வதைவிட போர்க்களத்தில் மாய்வது மேலானது.

✦ திட்டம் எதுவும் தேவையில்லை. ஆனால் ஆகப்போவது எதுவுமில்லை. கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள் அது போதும்.

✦ கோழைதான் வாழ்வில் பாவம் செய்கிறான். தைரியசாலியோ ஒருபோதும் பாவம் செய்வதில்லை.

✦ மக்களிடம் உண்மையான சமத்துவம் எப்போதும் இருந்ததில்லை. இனி இருக்கப்போவதுமில்லை.

✦ சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

✦ ஏனையவர்களுக்கு நன்மை செய்யும் முயற்சியில் இந்த உடல் அழிந்து போனால் அதுவே மேலானது.

✦ சுதந்திரமானவர்களாக இருங்கள். யாரிடமும் எதையும் எதிர்பாராதீர்கள்.


✦ பிரதிபலன் பாராமல் நன்மை செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆண்டுகளுக்குப் பின் ....

இத்தாலிக்கு 22 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்துள்ள காற்பந்து ஜாம்பவான் மரடோனாவுக்கு நேப்பிள்ஸ் நகரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை நேபோலி அணிக்காக மரடோனா விளையாடி வந்தார். அப்போது மரடோனா இத்தாலி அரசுக்கு 4 மில்லியன் யூரோ வரி கடனாக வைத்திருந்தார்.



இந்த கடன் தற்போது வட்டியுடன் சேர்த்து இந்திய மதிப்பில் 281 கோடியாக உயர்ந்துள்ளது. இதனால் இத்தாலிக்குள் வர மரடோனாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு விசாரணைக்காக நேப்பிள்ஸ் நகருக்கு வந்த மரடேனாவுக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# ஹைதராபாத்தில் உச்சக்கட்ட பாதுகாப்பு!



இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் தொடர் இன்று ஆந்திர மாநிலம் ஹைதராபாத் ராஜீவ்காந்தி மைதானத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெறுகிறது.

கடந்த வாரம் ஹைதராபாத்தில் 2 இடங்களில் இடம்பெற்ற தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதலையடுத்து கிரிக்கெட்போட்டியிலும் சதி வேலைகளில் ஈடுபட வாய்ப்பு இருப்பதாக உளவுதுறை எச்சரித்திருந்தது.

இந்நிலையில் ஹைதராபாத்தில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட்போட்டியில் பலத்த பாதுகாப்பு அளிக்க ஆந்திர மாநில அரசு முடிவுசெய்தது.

போட்டி நடைபெறும் மைதானம், வீரர்கள் தங்கியிருக்கும் ஹொட்டல் ஆகியவற்றில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வீரர்கள் செல்லும் பாதை முழுவதும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.


மைதானத்துக்கு செல்லும் வீரர்களை கடுமையான சோதனைக்கு பின்னரே அனுமதிப்பது, மைதானத்தில் இருக்கை எண்ணிக்கையை விட குறைவான பார்வையாளர்களை அனுமதிப்பது. மைதானத்துக்குள் வெளியில் இருந்து பொருட்களை கொண்டு வர தடைவிதிப்பது என பல இறுக்கமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஹைதராபாத்தில் இதுவரை நடந்த கிரிக்கெட் போட்டிகளுக்கு இல்லாத அளவு உச்சகட்ட பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

போட்டி இடம்பெறும் மைதானத்தை சுற்றி 60 சுழல் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மைதான பகுதியை சுற்றி வெடிகுண்டு சோதனை நிபுணர் குழுக்களும் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பல்லாயிரக்கணக்கான பொலிஸார், சிறப்புக் கொமாண்டோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# சச்சினிடம் புலி ஆவேசம்! - ஹைடன்

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் குறித்து, 'சச்சின்-கிரிக்கெட்டர் ஒப் தி செஞ்சுரி' என்ற புத்தகம் எழுதியுள்ளார். மார்ச் முதல் வாரத்தில் வெளியாகவுள்ள இதில் தெரிவிக்கப்பட்டுள்ள சில முக்கிய விடயங்கள் வருமாறு,



கடந்த 1990ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சச்சின் குறித்து கேளவிப்பட்டேன். இவரின் உருவத்திற்கும், கிரிக்கெட்டில் படைத்தசாதனைகளுக்கும் சம்பந்தமில்லாதது போல இருக்கும்.

உருவத்தில் மிகவும் சிறியவரான சச்சின், கிரிக்கெட்டின்அடையாளமாக திகழ்கிறார். ஓட்டங் கள் சேர்க்க வேண்டும் என்பதில் இவருக்குள், புலி போன்ற ஆவேசம் இருந்ததை கண்டேன். சிறிய உருவம் ஆனால் பெரிய போராட்டக்காரர் சச்சின்.

2008இல் எங்களுடைய மொகாலி டெஸ்ட் மறக்க முடியாதது. டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில், சச்சின் முதலிடத்துக்கு முன்னேறியது இங்குதான். மைதானத்தில் இருந்தவர்கள் பெரியளவில் இதை கொண்டாடினர். வாண வேடிக்கையால் அரங்கமே அதிர்ந்தது. இதனால் ஏற்பட்ட புகை மறையும் வரை,. போட்டியையே 20 நிமிடம் நிறுத்த வேணடிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு அந்தப்புத்தகத்தில் ஹைடன் குறிப்பிட்டுள்ளார்.

# பந்துவீச்சுக்கு தற்காலிக ஓய்வு -வொட்சன்

ஹைதராபாத்தில் இன்று தொடங்கும் 2ஆவது டெஸ்டில் இந்திய அணியை வீழ்த்த ஆக்ரோஷமாக விளையாட வேண்டும் எனக் கூறினார் அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட ஜாம்பவான் வொட்சன்.

நேற்று மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடுவதில் பெயர் பெற்றவர்கள். இந்த அணுகுமுறையை இந்த டெஸ்டில் நாங்கள் தொடர வேண்டியது அவசியமாகும். எங்களது தனிச்சிறப்பை (ஆக்ரோஷமாக ஆடுவது) வெளிப்படுத்துவதற்கான வழிமுறையை கண்டுபிடிக்க வேண்டும். ஒரு அணியாக கடுமையான போட்டியை கொடுக்க தயார் என்பதை களத்தில் நிரூபிக்க வேண்டியதை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

சென்னை டெஸ்டை பொறுத்தவரை இந்தியாவின் ஆட்ட திட்டங்கள், எங்களிடம் இருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. குறிப்பாக 2ஆவது இன்னிங்சில் அவர்களது வேகப்பந்து வீச்சாளர்கள் வெறும் 4 அல்லது 5 ஓவர்கள் வீசுவதற்கே கடினமாக இருந்ததை காண முடிந்தது. இது தான் எங்கள் இரு அணிக்கு இடையே மிகப்பெரிய வித்தியாசமாக அமைந்தது. சென்னை மைதானத்தில் இந்திய அணி விளையாடிய விதத்தில் இருந்து நாங்கள் நிறைய பாடம் கற்றுக்கொண்டுள்ளோம்.

ஐதராபாத் ஆடுகளம் வேகப்பந்து வீச்சில் பந்து நன்கு 'பவுன்ஸ்' ஆகும். அத்துடன் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் பந்து திரும்பவும் வாய்ப்பு உள்ளது. மொத்தத்தில் இது கிரிக்கெட்டுக்கு ஏற்ற அருமையான ஆடுகளமாகும்.

சென்னை டெஸ்டில் பந்து வீச முடியாமல், குறிப்பாக டோனி அதிரடியாக ஆட்டத்தின் போக்கை மாற்றிக் கொண்டிருந்த போது, பந்து வீச முடியாமல் போனது வருத்தம் அளித்தது.

துடுப்பாட்டத்தில் தொடர்ந்து கவனம் செலுத்துவதற்காக, பந்து வீசுவதை கைவிட்டுள்ளேன். கடந்த ஒரு மாதமாக பந்து வீச்சுக்குரிய பயிற்சி முறைகள் எதனையும் நான் மேற்கொள்ளவில்லை. மூன்று மாதங்களுக்கு பிறகு மீண்டும் பந்து வீச்சு பயிற்சியை தொடங்குவேன் இவ்வாறு வொட்சன் கூறினார்.



வொ ட் ச ன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாபெரும் போர் மார்ச் 7-ம் திகதி ஆரம்பம்

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 107வது மூன்று நாள் கொண்ட கிரிகெட் போட்டி இம்மாதம் 7-ம், 8-ம்,9-ம் திகதியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது .

ஒரு நாளுக்கு 6 மணித்தியாலமாக விளையாட்டில் குறைந்தது 90 பந்துப் பரி மாற்றங்களாகக் கொண்ட மூன்று நாள் போட் டியாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்கள், கிரிக்கெட் இரசிகர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இருப்பிட வசதி கொண்ட பகுதிக்காக ரூபா 100இனைக் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும் .

சுப்பிரமணியப் பூங்காப் பக்கமாக உள்ள நுழைவாயிலூடாக சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்கள்.

தம்பர் மண்டபப் பக்க வாயிலூடாக மத்திய கல்லூரி மாணவர்கள்,ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

போட்டியின் இறுதியில் சிறந்த துடுப்பட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த களத் துடுப்பாளார், சகல துறை ஆட்டகாரன், போட்டி ஆட்டநாயகன் , வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கு கேடயமும் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டி எதிர்வரும் 16-ம் திகதி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியை சிறந்த முறையில் நடந்துவதற்கு அனைத்து நலன் விரும்பிகளையும் ஒத்துழைப்பு வழங்குமாறு இருபாடசாலை அதிபர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# வலிகாமம் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



வலிகாமம் வலய பாடசாலைகளுக்கு இடையில் கால்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் பெண்களுக்கான போட்டி நடைபெற்றது.

இதில் 19 வயது அணிகள் பங்குபற்றின.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி எதிர் மகாஜனாக் கல்லூரி அணிகள் மோதிக்கொண்டன. இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி 3 கோல்களை போட்டு வெற்றி பெற்றது. மகாஜனாக் கல்லூரி அணி 1 கோலினைப் போட்டது.



இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மாதகல் சென்யோசப் எதிர் இளைவாலை கன்னியர் மட அணிகள் மோதிக் கொண்டன.

இதில் மாதகல் சென்ஜோசப் அணி 4 கோல்களைப் போட்டு வெற்றிபெற்றது.


இறுதியாட்டத்தில் மாதகல் சென்.யோசப் கல்லூரி எதிர் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணிகள் மோதிக் கொண்டன.



விறுவிறுப்பாக விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் மாதகல் சென்.யோசப் கல்லூரி அணி 2 கோல்களைப் போட்டு வலிகாமம் வலய சம்பியனாக . தெரிவு செய்யப்பட்டது.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் மகா ஜனாக் கல்லூரி எதிர் இளவாலை கன்னியர் மட அணிகள் மோதிக்கொண்டன. இதில் மகாஜனாக் கல்லூரி அணி 3 கோல்களைப் போட்டு 3 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளது

# இந்திய கோல்ப் பந்தயம் ஷர்மிளா சம்பியன்



மகளிர் புரபெசனல் கோல்ப் பந்தயத்தில் ஷர்மிளா நிகோலெட் சம்பியன் பட்டம் வென்றார்.

மகளிர் புரபொசனல் கோல்ப் பந்தயம் மும்பையில் நடைபெற்றது.

இதன் 3 வது சுற்றுப் பந்தயத்தில் பெங்களூரை சேர்ந்த 22 வயதான ஷர்மிளா நிகோலெட் 211 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

மற்றொரு இந்திய வீராங்களை நேகா திரிபாதி 213 புள்ளிகளுடன் 2ஆவது இடமும், மூத்த வீராங்கனை சிம்ரிதி மெக்ரா 216 புள்ளிகளுடன் 3 வது இடமும் பெற்றனர்.

## கிரிக்கெட் போட்டி

அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை 9மணிக்கு நடைபெறவுள்ளது. அணிக்கு 7பேர் 6 பந்து பரிமாற்றங்கள் கொண்டதாக இப் போட்டிகள் அமையும். பங்குபற்றும் கழகங்கள் இன்று காலை மைதானத்திற்கு வருமாறு கழகத் தலைவர் தெரிவித்துள்ளார். மேலதிக விபரங்களுக்கு 0776359833 இவ்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கூட்டமைப்பு எம்.பி...

முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். இம்பெயர் மற்றும் மீள்குடியேற்ற மக்கள் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கியுள்ளனர். பிரிட்டன் விஜயத்தை முடித்துக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைப் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. (எ-11)


மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

**விவசாய முகாமையாளர்**

**பதவி விண்ணப்பம்**

ஓய்வு பெற்ற விவசாய
போதனாசிரியர் அல்லது
விவசாயத்துறையில் அனுபவம்
வாய்ந்த ஓய்வு பெற்ற உயர் உத்தியோகத்
தர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 10.03.2013

இவ்வண்ணம்
சமூகசேவையிலுள்ள

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(C-2558)


## இலங்கைக்கு ஆதரவா...

அமர்வுகளில் உலக நாடுகள் ஆதரவை திரட்டும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பல நாடுகளின் ஆதரவினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும், அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-11)

## அமெரிக்காவும் இலங்...

அரசாங்கத்தின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி,இந்திய ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரதியின் படி அமெரிக்கா தனது பிரேரணையில் முன்வைத்துள்ள சில பிரேரணைகள் இந்தியாவினால் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்று கூறப்படுகின்றது.

இதேவேளை,இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல் தொடர்பாக நேர்மையானதாகவும், சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.(எ-11)

## ஹயஸ் விபத்து...

மாவட்டத்தைச் சேர்ந்த வாகனச் சாரதியான ஜெயசிங்க கெ.அமரபால (வயது-43), நுவரெலியாவைச் சேர்ந்த தென்தோனில் வசந்த சமன்குமார (வயது-25) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

மன்னார் மடுப்பகுதியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சசிகரன் (வயது-26), இரத்தின புரியைச் சேர்ந்த அபேவிக்கிரம குறப்புலியன ஆராய்ச்சி கே சஜித் ஜனகே (வயது-17), கண்டியைச் சேர்ந்த சமிந்த பண்டார செனவிரத்ன (வயது-28), மாத்தறையைச் சேர்ந்த நிகால் அமுனுசிங்க (வயது-40) ஆகிய நால்வரும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தினையடுத்து சாரதி சம்பவ இடத்திலும், மற்றையவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## புலிகளின் சிறுவர்...

தாமதமானது என தான் கேள்வி எழுப்ப போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை மனித உரிமை பேரவையில் பாலச்சந்திரன் சம்பந்தமான புகைப்படங்கள் அடங்கிய நோ பயர் சூன் திரைப்பட த்தை திரையிட திட்டமிடப்பட்டுள்ளது.இந்தத் திரைப் படத்தை உருவாக்கிய சனல் 4 தொலைக் காட்சியின் பணிப்பாளர் கலூம் மெக்ரேவை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு தான் சவால் விடுப்பதாகவும் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே குறித்த வீடியோ திரைப் படம் மனித உரிமை பேரவையின் மண்டபம் ஒன்றில் திரையிடப்பட்டது.

இந்தத் திரைப்படத்தை திரையிடுவதை நிறுத்துமாறு ஏற்கெனவே இலங்கை மனித உரிமை பேரவையின் தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நோ ஃபயர் சூன்...

அறையில் அது திரையிடப்பட்டது.

இலங்கை அரசாங்கம் இந்தப் படத்தை அங்கு திரையிட அனுமதிக்கக் கூடாது என்று கூறியிருந்தபோதிலும், ஐ.நாவில் கருத்து சுதந்திரத்தை தடுக்க முடியாது என்ற அடிப் படையில் அது அங்கு திரையிடப்பட்டதாக அங்கு அந்த படத்தை பார்த்தவர்களில் ஒருவரான நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஐ.நா நடவடிக்கைகளுக்கான இணைப்பாளரான முருகையா சுஜிந்தன் கூறியுள்ளார்.

பாதுகாப்பு வலயத்தில் நடந்ததாகக் கூறப் படும் குற்றங்கள், சிறுவர்கள் இந்தப் போரினால் எவ்வளவு பாதிக்கப்பட்டார்கள் என்பது போன்ற பல விடயங்களை அந்தப் படம் காண்பித்ததாகவும், பெண்களுக்கு எதிராக நடந்த குற்றங்கள் மற்றும் சிறுவன் பாலச்சந்திரனின் கொலை குறித்த தகவல்கள் ஆகியனவும் அதில் அதிகம் இடம்பெற்றதாகவும் அவர் கூறினார்.

அந்த மண்டபத்துக்கு வந்திருந்த ஜெனிவாவுக்கான இலங்கை தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க, இந்தப் படம் புனையப்பட்ட காட்சிகளை காண்பித்தது என்று கூறியிருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து அங்கு பேசிய இலங்கையில் நடந்த போர் நிகழ்வுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக ஐ.நா மன்ற செயலரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவைச் சேர்ந்த ஜாஸ் மின் சூகா, போர் நிகழ்வுகள் குறித்து சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்பதை இது உறுதி செய்கிறது எனக் கூறியதாகவும் சுஜிந்தன் கூறியுள்ளார். (எ-11)

## போர்க் குற்ற விசாரணைகள்...

தமிழ் மக்களின் நலன்கள் சார்ந்து இலங்கை அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் இந்த அறிக்கை தொடர்பிலான அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து இந்தச்சந்திப்பில்ஊடகவியலாளர்ஒருவர்கேள்வி எழுப்பியபோதேஅவர்இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எமக்குக் கிடைத்த மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் இந்த அறிக்கை தொடர்பில் நாம் ஆராய்ந்தோம்.

சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு புறம்பாக இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் நாம் வலுவான கவலையை ஏற்கெனவே தெரியப்படுத்தியுள்ளோம்.

அத்துடன், இலங்கையில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள் உள்ளிட்ட மனித வுரிமை மீறல் சம்பவங்கள் குறித்து இன்று வரை இலங்கை அரசாங்கம் ஒரு நம்பகரமான விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து நாம் உண்மையிலே ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சமரசிங்கவின்...

பேரவையில் இலங்கை தெரிவித்துள்ளது. புதன்கிழமை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் தரப்பு வாதங்களை முன்வைத்துப் பேசிய அமைச்சர் மகிந்த சமரசிங்க,

மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில், இலங்கை ஏற்கெனவே உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கி விட்ட நிலையில் இந்தத் தீர்மானம் தமது அபிப்பிராயப்படி தேவையற்ற ஒன்று என்று கூறியிருந்தார்.

ஆனால் இலங்கையில் மனித உரிமைகள் சூழலில் முன்னேற்றமடையவில்லை என்று உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள் கூறுகின்றன.

படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளதாக மகிந்த சமரசிங்க முழுப் பூசணியை சோற்றில் மறைக்கும் நடவடிக்கை என்று பெண்கள் நடவடிக்கை வலையமைப்பைச் சேர்ந்த சித்தாரா ஷீன் தெரிவித்துள்ளார்.

படையினரிடம் தமது உறவினர்களை கையளித்த பலருக்கு அவர்களின் நிலை என்ன ஆனது என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறினார். இலங்கை அரச நிர்வாகத்தில் இராணுவ குறுக்கீடு இல்லை என்று அரசு கூறுகிறது.

ஆனால் வடக்கே இரண்டு இலட்சம் இராணுவத்தினர் இருக்கின்றனர். நிரந்தர கட்டமைப்புக்களையும் இராணுவம் உருவாக்கி வருகிறது.

பாலர் பள்ளி ஆசிரியர்கள் நியமனத்தைக்கூட இராணுவம் தான் வழங்குகிறது என்றார் அவர்.

அரசு சாரா நிறுவனங்கள் தொடர்ந்து கண் காணிக்கப்படுவதாகவும், கல்வி உள்ளிட்ட பல துறைகளில் அவர்களால் செயல்பட முடியாமல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஏ-11)

# புலிகளின் அரசியல் புத்தகங்கள் புதுக்குடியிருப்பில் மீட்பு

புதுக்குடியிருப்பு வல்லிபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரித்தானியாவின் நிதியுதவியில் இயங்கும் கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அலுவலகத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் அரசியல் தொடர்பாக எழுதப்பட்ட 229 புத்தகங்களை விசேட அதிரடிப்படையினரின் குழுவொன்று கைப்பற்றியுள்ளது.

கைப்பற்றிய அனைத்து புத்தகங்களிலும் விடுதலைப்புலிகள் அமைப்பு என அச்சிடப்பட்டுள்ளது என முல்லைத்தீவு பாதுகாப்பு பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் நூலகத்தில் இருந்த புத்தகங்களை இந்த நிறுவனம் தனது அலுவலகத்தில் வைத்திருந்தா? என்பதனை அறிய புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த புத்தகங்களை தவிர அலுவகத்திற்கு அருகில் உள்ள மடுவம் ஒன்றில் புலிகளின் 300க்கும் மேற்பட்ட பழுதடைந்த புத்தகங்கள் காணப்பட்டதாகவும் அவற்றை பொலிஸார் தீயிட்டு கொளுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த அரசசார்பற்ற நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளராக பணியாற்றி வருபவர் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையை சேர்ந்தவர் எனவும் அவரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ-11)


FRENCH LANGUAGE CENTRE
சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.
FRENCH CLASSES- பிரெஞ்சு வகுப்புக்கள்
இவ்வருடத்தின் 4வது பிரிவு ஆரம்பம் விரைவில்....
Canada , French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, சர்வதேச் சான்றிதழ்களை (International Certificates) பெற்றுக்கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr.V. Jegan (Teaching Training in France-2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்)
No.23,Palaly Road,Jaffna. (அப்பலோ வைத்தியசாலை முன்பாக ஆரியகுளம்.)
181,1st Floor,Main Road, Nelliady. (சோதி வீதி முன்பாக உள்ள மாடியில்)
T.P:- 077 9789456
இணைப்பு: BCLL இன் English Courses, Deutsch, சிங்கள வகுப்புக்களும்..
(சி-2557)

Deutsch, Dutch, French, English
ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்
தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.
தொடர்பு: விவேகானந்தா அக்கடமி
221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464
(சி-2555)

Security Guard
டோகா/கட்டார்/ டுபாய் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு
✔ ஆண், பெண்
✔ வயது 18-40
✔ 5 நாட்கள் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
✔ City & Guilds இனால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்
✔ மாதாந்த சம்பளம் 65,000/- + மேலதிக நேரம்
In Joint Venture With
தொடர்புகளுக்கு:
No: 77,
Clock Tower Road,
Jaffna. 021 730 6000
ICS Study Overseas
TRAINGUARD

மணல் மண் வேண்டுமா?
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
உங்கள் இடத்திற்கே கொண்டு வருகிறோம்.
4 1/2 டிராக்டர் 20,500/=
தொடர்பு: ராம்
072 63 78 546
(C-2521)

குழந்தைகளுக்கான ஆடைகள், கற்பிணிப் பெண்களுக்குத் தேவையான பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும். மழலைகளுக்கான புதிய நவீன ஆடைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்


ABI BABY MART
267, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
கலட்டிச் சந்திக்கு அருகில்
(சி-2556)

டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
(DOHA QATAR) அரச அனுமதி இல. L.L No 2490
இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Air trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தி னூடாக கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.
◆ மேசன்(Meson) ◆ இலக்ரிஷியன் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்) ◆ கார்பென்டர் ◆ House painter ◆ பைப்லைன் பொருத்துனர் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்) ◆ கல்f லைசன் சாரதிகள் ◆ Welders ◆ கம்பி சுவடுகட்டுபவர்கள் ◆ உதவியாளர் ◆ சுத்திகரிப்பாளர்
இன்னும் பல வாய்ப்புக்கள், அதி உயர் சம்பளம் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள். கீழ்க் காணும் முகவரியில், மார்ச் மாதம் 1ம்,2ம்,3ம்,4ம் திகதிகளில் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்
ஆவணங்கள்: Passtport, Passtport (Photo), தகைமை சான்றிதழ்
மார்ச்-01 Jaffna 0777929475
மார்ச்-02 முல்லைத்தீவு Holly Wood city Word No:02,Mulliyawalai,Mullaitivu.0777929475, 0772393165
மார்ச்-03 வவுனியா Lanka voice No.24, Sation Road. 0777929475, 0772393165
மார்ச்-04 கொழும்பு Air trust 945, Maradana Road, Borella, Colombo-08,0112676777
(C-2503)

இசை வகுப்புக்கள்
Organ , Guitar, புல்லாங்குழல் இசை வகுப்புக்கள்
கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை நல்லூர்.
T.P:- 077 7031293 (2035)

வெளிநாடு ஒன்றில் தொழில் வாய்ப்பா / பட்டப்படிப்பா/உயர் கல்வியா/சுயதொழிலா OR மேலைத்தேய நாடு ஒன்றுக்கு செல்ல வேண்டுமா?
இலவச ஆலோசனைக்கும், பயணத்துக்கும், தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ளவும்.
இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
Lanka Voice
0750650084
(559)

கார் விற்பனைக்கு
10 Sri மஸ்ரா (ஜப்பான்) கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0770710874
(2048)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி
விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக
edCIL
INDIAN Education Fair
பிரவேசம் இலவசம்
ON THE SPOT ADMISSIONS
2013 மார்ச் மாதம்
5 மு.ப. 10.30 – பி.ப. 6.30
6 மு.ப. 10.30 – பி.ப. 12.00
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
இந்திய கல்விச் சந்தை உங்களுக்கு வழங்குவது என்ன?
- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்
ORGANISED BY edCIL EdCIL (India) Limited A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY Consulate General of India Jaffna
PROFESSIONAL EXHIBITION ORGANISER LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
OFFICIAL TV


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org